KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஞு ஏப்ரல் மீ 14உ [No. 15

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 281
2. குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 283
3. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 7ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 285
4. தமிழ்ப்பாடம் நளவெண்பா - சுயம்வரகாண்டம் 287
5. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (செங்கீரைப்பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 291
6. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 292
7. அப்பர் (64 கலை—தர்க்கம்—சப்தப்ரமாணம்) E. N. தணிகாசல முதலியார் B A. B.L. 294
8. பெற்றோரும் மக்களும் M. சோமசுந்தரம் பிள்ளை B.A., L.T. 295
9. சொல்லுடாட்டம் 297
10. வர்த்தமானம் 299

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 7.

அளவற்ற அன்பினோடும் அசைவற்ற அறத்தின்பால் நம்மைச் செலுத்துகின்ற எண்ணங்கள் வரையறைப் படுத்தி விளம்புதற்கொத்த தெளிவின்றி இருக்கலாமென்றும், அவ்வாறு இருத்தலும் வித்தக நன்னிலை யெய்திவருதற்கோ ரறிகுறி யாகுமென்றுங் கூறினோம். வித்தக எண்ணங்கள் தெளிவுறத் திரளா திருக்கலாம் என்றவாசகத்தின் தர்க்கம்மயங்கி, தெளிவெய்தா எண்ணங்களனைத்தும் வித்தகமே என எதிருற எவரேனும் கொள்வாரெனின் அப்பிழை மிகப் பெரிதாம். இவ் விபரிதம் நேராமல் முதலிற் காத்துக் கொளல் வேண்டும். இதுவன்றி வேறொன்றிரண்டு விடயங்கள் நம் மதியகத்தே வைத்தற் குள.

முழுமூட மருட்கையை, முன்னுரைத்தபடி, வித்தகத்தின் தெளிவறநின்ற தத்துவச்செய்தியெனத் தவறுமை ஒருவாறு எளியதே. "தெளிவிலையாதல் வித்தகத்திற் குரித்தே" என்னுஞ் சூத்திரத்தில் நிலைத்தஒரு நம்பிக்கை நம் சிந்தனையைச் சிற்சில பிழைகளுக்கு இழுத்துச் செல்வதும் இயலும். தெளிவுடைய எண்ணங்களுக்குச் சிறப்பில்லை என்றேனும், மற்று, தெளிவிலாமையே வித்தகஎண்ணங்களின் சிறப்பாகும் என்றேனும் மதித்தலாகாது. காரணத் துண்மையும் நிகழ்ச்சிமுறையும் முடிவின் தன்மையும் தெரியும் வண்ணம் வரலாறுவாய்ந்த எண்ணங்கள் சிறப்பிற் சிறிதேனுங் குறைந்தன வல்ல. தெளிவுடைய எண்ணங்கள் படைத்தவர்களாகவாக நாம், இன்னும் தெளிவு அடையாத எண்ணங்களின் பெருமையை நன்குமதித்துப் பாராட்டக் கற்கின்றவராவோம். ஆதலின், நம்மால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு நம்முடைய எண்ணங்களைத் தெளிவுசெய்துகொள்ளும்படி இடைவிடாது முயன்றுவருகின்ற தாளாண்மை உடையவர்கள் ஆதல்வேண்டும். நிழல்போல் தோன்றித்தோன்றி முதலில் மங்கியிருந்த எண்ணங்கள் உருத்தெளிந்து விளங்குங்கால், அவைதாம், இதுகாறும் கனவிலேயும் கருதியிராத சில புதிய எண்ணங்களை எழுப்பத் தலைப்படும். முன்னது தெளியத் தெளியப் பின்னதன் பெருமையை நன்குணர்ந்து மதிப்பதற் குரியவர்களாவோம். இருகூறுடைத்து நம் வாழ்க்கை. செய்யுங் காரணமும் காரியமும் அதனால் எய்தும் பயனும் இதுவிதுவென மனங்கொண்டு காலமும் இடமும் கருவியுந் தெரிந்து வினையாடும் வெளிவாழ்க்கை யொன்று; மற்றது, ஈதென் றியம்பவொண்ணாவகைகளில் இயங்கப்பெறும் உள்வாழ்க்கை. முன்னது தெளிவுடைய எண்ணங்களாலும், பின்னது தெளிவுபெற்றிலா எண்ணங்களாலும் நடைபெறுகின்றன. இது மெய்வாழ்க்கையில் தலைப்பட்டார் கால் வைக்கும் முதற்படி. சனங்களில் பெரும்பாலோர்க்குத் தாம் வாழ்கின்றார் என்பதேனும் வாழ்வதற்குரியவர் என்றேனுந் தெரிவதில்லை. உயிர்சுமந்து திரிவதே கருமமாய்ப் பெரும்பாலும் பாவி எனும் நாமம் படைத்துக் கழிகின்றனர். "இனிதுண்ணோம் ஆரப் பெறேம்' என்னும் அவாவொடு ஏங்குகின்றாராயினும், உண்ணற்கும் ஆரப் பெறுதற்கும் அவர் வேண்டுகின்றவைகள் யாவை யென்றேனும், அவைகளை அடையுமாறெவ்வா றென்றேனும் தெளிவுறச் செயல்வகை தெரிந்து ஒன்றும் புரிபவரல்லராதலின், அவர்தமை வெளி

வாழ்க்கைதானும் வாழ்பவர் என்றுஅழைப்பதற்கியல்வதில்லை. அரசியல் பொருளாதாரம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் இவ்வினத்தைச் சேர்ந்தவர்களே. தாம், "இனிதுண்ணேம் ஆரப்பெறேம்' என்ற கலக்கமே இவ்வியக்கங்களின் தூண்டுகோல். மற்று "எமக்காக அன்றே இது,ஏழை மக்கள் எண்பதுகோடிக்கல்லவோ இது கூறுகின்றோம்" என்போ ரெல்லாம் மெய்ம்மைய ரல்லர். சுயநலத் துரோகிகள் வாயிலும் இச்சொல் எளிதில் வரக்கூடும். மற்று, துரோகமே கருத்தாய்த் துவக்காவிடத்தும்,இச்சொற்களுக்குள்ளே நுழைந்து நோக்குங்கால் உருப்பெறு ஒரு சுயநயக்கரு அங்கு உறங்கிக்கிடக்கக் காணலாம் இதனைத்தான் காணல் அருமையாயினும் என்! மற்றவர்க்கு, ஏதனை இனிதுஉண்பிக்கவும் ஆரப்பெறுவிக்கவும் விழைக்கின்றுரென்பது வார்த்தையளவிற்கு மேல் விளங்குவதில்லையாதலின் வெளிவாழ்க்கைத் திறத்திலுந் தெளிவின்றி அவர் காலம் ஒழிகின்றது.

இத்திறத்தவர் கிடக்க, தெளிவுடைய வெண்ணங்களால் மனிதவெளிவாழ்க்கை ஆளப்பெறுகின்ற தென்னலாம். எனினும், முழு உண்மையும் இதனோடு முடியவில்லை. உள்வாழ்க்கையை இயக்குகின்ற அந்தத் தெளிவிலா எண்ணங்களும் உருவுந்திருவும் ஓயாமல்வளர்ந்து வளர்ந்து தெளிவடைவதால், அவைதாம் வெளிவாழ்க்கையை வழிப்படுத்தத் தலைப்படுகின்றன. முதலில், தெளிந்த சில எண்ணங்கள் இருந்ததன் நற்பயன் இது. தோன்றாதிருந்த ஆன்மவாழ்க்கை இப்பொழுது தோன்றித்திகழும் வெளிவாழ்க்கையோடிணங்கவல்லதாகின்றது.தெளிவிலா எண்ணங்களின் தன்மை வன்மை முதலியன தெளிவுடைய எண்ணங்களின் தன்மை வன்மை முதலியவற்றைச் சார்ந்து நிற்கும். வித்தகர்கள் ஆர்வமுடன் தேடிவருகின்ற நிரந்தர உண்மைகள் பல, தாம் வெளிப்படற்குரிய காலத்தை எதிர்நோக்கிக் காத்தனவாய், தெளிவிலா அவ்வெண்ணங்களுக்கிடையே கரந்திருக்கலாம். நாமோ அவைகளை நெடுங்காலம் காத்துக் கிடக்கும்படி விட்டுவிடல் தகவன்று. கல்வியால் கேள்வியால் மனன பாவனைகளால், நமது உள்ளப்பளிங்கைத் தூயதாக்கி அதனில் உயரிய எண்ணமொன்றைத் தெளிவுறக் காண்போமாகில், அவ்வெண்ணம் தன்னினும் சீரியதோர் எண்ணத்தின் நிழலை அப்பளிங்கில் படியவிட்டு, நமது வெளிவாழ்க்கையை ஆட்சிபுரிய வந்துவிடும். அந்த வெண்ணமும் அவ்வாறே தன்னினும் அழகிய வேறோர் எண்ணத்திற்கிடங்கொடுத்துப் புறத்தொளிபரவ வந்திடல் வரன்முறை இப்படியே ஒன்றன்பின் ஒன்றாய் உயர்வுந் தெளிவும் உருவமும் பெற்று முன்வரும் எண்ணங்களால் முதிர்ந்தவர்களாவோம். இதனையே இன்னொரு விதத்திலுங் கூறலாம்; தெளிவுபெற்று வெளிவாழ்க்கையை இயக்குகின்ற எண்ணம்,உள்ளத்தே உறங்கியிருந்த எண்ணமொன்றைத் துயிலெழுப்ப, இது தன்முறையில் மற்றொன்றை எழுப்பிவிட்டு வெளிவர முயல்வதாகும். இவ் வரன்முறையில் துயிலுணரு மெண்ணங்கள் ஒன்றற் கொன்று அழகினும் பெருமையினும் உயர்ந்ததாயிருக்கும். இன்னணம், மெல்லடிவைத்துத் தொடர்கின்ற இவ்வரிசையில், ஒருநாள் நம் சிறு விரலொன்று பெரியதோர் மெய்ம்மையைத் தொட்டபரிசு பெற்றதாதலும் இயலும். ஆதலின் எக்காலத்திலும் தெளிவில்லாமலிருத்தலே எண்ணங்களின் சிறப்பாகுமென்றேனும், அல்லது தெளிவுடைய எண்ணங்களிற் சிறப்பில்லையென்றேனும் மதிக்கின்ற பிழைக்கு ஒருவரும் ஆளாகலாகாது.

தெளிவுடைய எண்ணங்கள், தெளிவற்ற எண்ணங்கள், இதயம் புத்தி சித்தம் பகுத்தறிவு ஆன்மா, என்றென்று நாம் பயிலும் சொற்களிவை யனைத்தும் அந்தத்தில் சற்றேறக்குறைய ஒரு பொருளையே குறிக்கின்றன: மனிதன் எய்தவேண்டியதும் எய்த வல்லதுமான மெய்யாய செல்வத்தின் மறுபெயர்கள் இவை. மற்று, ரூபா அணா பையாகக் கணிக்கப்படும் செல்வங்களுக்கு வெறுக்கையென்றும் கைத்து என்றும் பெயரமைந்த பான்மையே சாலத்தக்கது மனிதனது பொய்யாசைகள், இடம் பொருள் ஏவல் எனக் கனவுகாண்பது போல்,அவன் பகுத்தறிவு புத்தி இதயங்கள் அடைதற்காதரிக்கின்ற ஓர் அவாவின் உருவெளித்தோற்றமே ஆன்மா ஆதலுங்கூடும். மற்று அவ்வாறே அவ்வான்மா அடைந்துள்ள ஓர் ஆசையின் உருவெளித்தோற்றமே கடவுள் என்பதும் இயலும். யா ரறிவார்! நம்மைச் சூழ்ந்திருக்கின்ற அறியாமைக் களவில்லை. அத்துணையுந் தெளிந்தபின்னரே வாழத் தலைப்படுதலென்பது ஆகாத தொன்றாம். மேன்மேலுங் கற்பதிலேயே தன்னுயிரனைத்தையும் தேய்த்துவந்த ஓர் பண்டிதனை நோக்கி, "இவ்வளவு கற்றிருக்கின்ற நீர் இன்னும் ஏன் ஊணுறக்கமின்றிக் கற்பதிலேயே காலங்கழித்து மாள்கின்றீர், இதுவே போதுமே" என்றோர்க்கு அப்பண்டிதன்,

> Let me know all! Prate not of most or least,
> Painful or easy!
> Even to the crumbs I'd fain eat up the feast,
> Ay, nor feel queasy

எனப் பதிலுரைத்தான் என்று ஆங்கில வித்தகக்கவிகளில் ஒருவராகிய ராபர்ட் ப்ரௌனிங் என்பவர் பாடினர். இத்தூரஞ் செல்லவல்லதாய், நமக்கு எஞ்சி நிற்கும் குறிக்கோள் ஒன்று என்று முளது: அதுதான், நம்மையே நாம் முற்றிலும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதாம்.தன்னையே முழுவதும்உய்த்துணர்ந்தவொருவன், மற்றவரைக் காட்டிலும் நல்லவனுயும், வித்தகமும் உண்மையும் உடையவனுயும், நீதிமானுயும் இருப்பான். இத்தகையவனையே தருமசாலி என்பர். பிரபஞ்சத்தில் தன்னுடைய இடம் எதுவென்பதை நிச்சயமாகத் தெளிந்துகொள்வதே தருமந் தழைப்பதற்காதாரமாகின்றது. எனினும், பிரபஞ்சத்திற்கும் தனக்குமுள்ள உறவினை முற்றிலுந் தெரியக் கண்டுகொண்டேன் என்று எவரே துணிந்து செப்பவல்லார். ஆராயுமிடத்துத் தருமத்தின் வேர்கள்தாம், நமது அறிவிற்கெல்லா மப்பாலாய விடயங்களில் ஊன்றியிருக்கவில்லையோ! ஆயினும், இவ்வுண்மை, ஆள்வினையுடையவர் ஊக்கத்தை உயர்த்துமேயன்றிச் சோர்தரத் தளர்த்திவைக்குந் தன்மையன அல்ல. இது செய்துமுடிக்க இயலாததேனும் இதனைச் செய்து வருபவரே பெரியோர்.

குன்றுடையானும் மக்களும்

[269-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் புத்தகம் — அண்ணன்மார் வரலாறு

1. அண்ணன்மார் பிறப்பு வளர்ப்பு

தாமரைநாச்சி வரம்பெற்றுவந்தநாள்தொட்டுக்குளி யாமல்நின்று கருப்பமுற்றாள்.

குன்றுடையான் ஒரு நாள் மனைவியை அழைத்து, 'தாமரை, பத்துவருடம் தவஞ்செய்து வரம்பெற்றுத் திரும்பிவந்தோம். நம்பங்காளிகள் இறந்தபின் அவர்க ளுடைய மக்களாகிய தம்பிமாரை நாமோ பார்க்கவே இல்லை. இனி அவர்களைப் பாராதிருப்பது முறையன்று. அவர்களைப் பார்க்கவேண்டும் என்னும் ஆசையும் என் மனத்திலுதித்தது. நான்போய்ப் பார்த்துவருகிறேன்' என்றான்.

தாமரை, 'உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பால். உங்கள் தம்பிமாரும் உங்களைப்போல் நேர்மையுடைய வர்களாயின், நீங்கள் போவது நலமே. வஞ்சகர்களான உங்கள் பங்காளிகளுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தும் அவர்கள் உண்மையாளர்களா யிருப்பார்களா? என் றாலும் நமக்குக் கடவுள் துணையிருப்பார். அவர், நம் பினவரைக் கைவிடமாட்டார். நீங்கள் போகிற இடத் திலே கண்ணுங்கருத்துமாயிருந்து வாருங்கள்' என்று சொல்லி விடைகொடுத்தாள்.

ஐயன் குன்றுடையான் சிற்றரசனுயினும் கைத்தடி யையும் கம்பளியையும் விடாதவனாய் வழிநடந்து, பாய்ச்சலூரையடைந்து, தம்பிமார் வீடுநோக்கிவந்து, 'உஸ், அப்பா' என்று திண்ணையிலுட்கார்ந்தான். காடு கரை போயிருந்த தம்பிமார் மாலைப்பொழுதில் வீட் டுக்கு வந்து தம் சிற்றப்பனை அடையாளங்கண்டு, முக மன்கூறி யுபசரித்து, கைகால்கள் கழுவ நீர்கொடுத்து, அளவளாவி, குன்றுடையான் வரம்பெற்றுவந்த செய் திகள் யாவுங்கேட்டு, அன்றிரவு ஓர் விருந்துசெய்தார் கள். விருந்துண்கையில் தம்பிமார் சிற்றப்பனைப் பார் த்து, 'ஐயா, தலைமுறைக் கொருதடவை நம்வீட்டில் பெரியவீட்டுத் தெய்வம் கும்பிடுவது உண்டன்றோ. நாளை நல்லநாள். பெரியவர்களாகிய நீங்கள் வரவில்லை யே என்று காத்திருந்தோம். நீங்களும் வந்துவிட்டீர் கள். அதுவும் எங்கள் நல்லவேளையே. இனி நீங்கள் இங்கேயே இருந்து பூசையை நடத்தவேண்டும்' என்று பணிவோடு இரந்தனர். குன்றுடையான், தம்பியர்கள் செய்த மரியாதையைக்கண்டு களித்து, 'நல்லது, தம் பிமார்களே, உங்கள் இஷ்டம்போலவே செய்வோம். பூசைக்கு வேண்டிய பொருள்களைச் சித்தப்படுத்துங் கள். நான் காலையில் ஊருக்குப்போய்த் திரும்பிவரு கிறேன்' என்று சொல்லி, அன்றிரவு தம்பிமார் வீட் டில் படுத்திருந்து, மறுநாள் அதிகாலையில் சிற்றூலைப் பட்டணத்துக்குத் திரும்பிவந்தான்.

சிற்றப்பன் போனபின் தம்பிமார் நெடுநேரம் கூடிப் பேசி, குன்றுடையான் திரும்பிவந்தால் அவனைப் பூசைக்காரனாக நியமித்துத் தலைமுழுக்காட்டிக் கொல் லவேண்டும் என்று சூழ்ச்சி செய்தனர். குன்றுடை யான் தலைமுழுகுகையில் கொதிக்கும் எண்ணெயைத் தலையில் தேய்க்கவேண்டுமென்றும், கொதிக்கும் நீ ரைத் தலையில் ஊற்றவேண்டும் என்றும், பொய்க்குழி தோண்டி அதன்மேலே முக்காலியிட்டு அவனைஉட்கார வைக்கவேண்டும் என்றும்; இச்சூழ்ச்சிகள் யாதொன் றினாலும் அவன் இறவாதிருந்தால் பூசைமுடித்துச் சாப்பிடுகையில் சோற்றிலும் சாற்றிலும் நஞ்சுகலந்து அவனை யொழிக்கவேண்டும் என்றும் தீர்மானித்து, வயிறுவலிக்க ஒருவர்க்கொருவர் நகைத்து, வேலைக் காரர்களை யழைத்து வேண்டியன செய்ய உத்தரவிட்டு, சிற்றூலைப்பட்டணத்தில் தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு மடிந்த தமதுதந்தையரில் இளையவனாகியகாளிங்கராய கவுண்டனின்மனைவியை மறைவாய் அழைத்து, குன் றுடையானுக்குச் சமைக்கும் சோற்றிலும் சாற்றிலும் ஒருவரும் அறியாவண்ணம் நஞ்சு கலக்கும்படி ஏவி னார்கள்.

குன்றுடையான் பாய்ச்சலூரில் தம்பிமார் தன்னை உபசரித்தவாற்றை மனைவிக்குச் சொல்லி, 'அடியே! தாமரை, பிள்ளைகள் சிறியவர்களானாலும் புத்தி பெரிய தாயிருக்கிறது' என்றுபுகழ்ந்து, மனைவியின்பால் வி டைபெற்று மீண்டும் பாய்ச்சலூருக்குப்போனான்.

தம்பிமார் சிற்றப்பனை வரவேற்றுப் பலவாறு உப சரித்துத் தலைமுழுகும்படி சொல்லினர். பொய்க்குழி யின்மேல் வைத்த முக்காலியில் ஐயனை உட்காரவைத் தார்கள், முக்காலி குழியில் வீழவில்லை. கொதிக்கும் எண்ணெய்யைத் தலையில் ஊற்றினார்கள், அது குளிர்ந் திருந்தது. கொதிநீரைத் தலையில் வார்த்தார்கள், அது அளவான வெப்பமுடையதாயிற்று. தம்பிமார் இந்த விந்தையைக்கண்டு வெருண்டு, ஏக்கமுற்று, கிழவன் முடிவில் நஞ்சுண்டு இறத்தல் நிச்சயமென்று நம்பியிரு ந்தனர். குளித்தபின் குன்றுடையான், பேழையிலிரு ந்த பெரியவீட்டுத் தெய்வத்தை யெடுத்துப் பூசை செய்து முடித்தான். பின்பு அவனை மூன்றுவீட்டுக் கப்பால் ஒரு தனிவீட்டில் சோறுண்டு வரும்படி அனு ப்பினார்கள். ஒரு வேலைக்காரி இலைபோட்டு நஞ்சுகல ந்த சோறு கறி பரிமாறினாள். தம்பிமார் பதினெண் மரும் கிழவன் இறந்தான் என்னுஞ் செய்தி வரும் வரும் என்று ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்துக் குழுமியிருந்தனர்.

இதற்கிடையில், பாய்ச்சலூர்ப் பள்ளிக்கூடத்துக் குச்சென்ற அவ்வூரா னொருவன் அங்குப் படித்துக் கொண்டிருந்த தம்பிமார் மக்களைப்பார்த்து, 'உங்கள் சின்னப்பாட்டன் வந்து பூசைசெய்து சாப்பிடுகிறான்' என்று சொல்லுதலும், அவர்களிற் பன்னிரு சிறுவர் நல்ல பலகாரம் கிடைக்குமென்று உடனே புறப்பட் டுக் குன்றுடையான் விருந்துண்ணும் வீட்டையடை ந்து, ஓடி உள்ளே சென்று அவனைச் சூழநின்றனர். பேரப்பிள்ளைகள் வந்தார்களென்று குன்றுடையான் மகிழ்ச்சியடைந்து, தன் இலையிலிருந்த சோற்றையும் சாற்றையும் கூட்டிப்பிசைந்து பன்னிரண்டு கவளங்க ளாக்கி, தான் புசிக்குமுன் ஒவ்வொரு பிள்ளைக்கும் தலைக்கொரு கவளங் கொடுத்தான். அப்பிள்ளைகள் ஆவலோடு அதனைவாங்கித்தின்று தலைசுழலத் தள்ளி வீழ்ந்து உயிர் துறந்தார்கள். இதைக்கண்டு குன்றுடை யான் தம்பிமாரைக் கூவி யழுதான். அழுகுரலைக், கேட்ட தம்பிமார், 'கிழவனுக்கு உயிர் போகிறது.

அழுகிறான்!' என்று சொல்லிக் கைகொட்டி நகைத்தனர். சிறிதுநேரம் சென்றபின் அவர்கள் 'இனி நாம் போய்ப்பார்ப்போம்'என்றுசொல்லி யெழுந்துபோய்த் தம் பிள்ளைகள் இறந்துகிடத்தலைக்கண்டு தலைதலையாயடித்துக்கொண்டு கோவென் றழுதார்கள். மனைவியரும் ஓடிவந்து மக்கள்மேல் வீழ்ந்து புலம்பினர். பின்பு கருமாதிகள் நடந்தன. ஐயன் ஊருக்குத் திரும்பினான்.

குன்றுடையான் நடந்த காரியங்களை மனைவிக்குச் சொல்லி யழுதான். மனைவி, 'கடவுள் நம் பங்கிலிருக்கிறார்' என்று கூறிக் கணவனைத் தேற்றினாள்.

தாமரைநாச்சி கருப்பமுற்றுப்பத்துமாதங்களும் எட்டு நாட்களும் கழிந்தன. அவள் கொம்பிற்பழுத்த பழம்போ லாயினள். அன்று குழந்தை பிறக்கும் என்பதை யவள் குறிப்பாலுணர்ந்து கணவனுக்குச் செய்தி சொல்லியனுப்பினாள்.

குன்றுடையான் பொருக்கென எழுந்து பாய்ச்சலூருக்குப்போய்த் தம் மனைவியரைத் துணைக்கு அனுப்புமாறு தம்பியரை வேண்டினான். தம்பிமார், 'எங்கள் மனைவியர்க்கு என்ன தெரியும்? இந்த ஊரில் மருத்துவம் பார்க்கும் சொக்கி என்பாள் ஒருத்தி இருக்கிறாள். அவள் தன் வேலையில் சமர்த்தி. அவளை யனுப்புகிறோம்' என்று சொல்லிச் சொக்கியை மறைவாய் அழைத்து, 'அடி சொக்கீ' குன்றுடையானுக்கு ஆண்பிள்ளைபிறந்தால் உடனே கழுத்தைத்திருகிக்கொன்று நஞ்சுப்பானையிலிட்டுப் பெருக்கான் வங்கிலே திணித்துவிடு. பெண்பிள்ளை பிறந்தால் உயிருடன் விட்டுவிடு. நீ இது செய்யத்தவறினால் உன்னை உதைத்து ஊரைவிட்டோட்டுவோம். நாங்கள் சொன்னபடி செய்து வந்தால் உனக்குத் தகுந்த வரிசை செய்கிறோம். நாங்கள் சொன்னதை வெளிவிட்டால் உன்னை உடனே கொன்றுவிடுவோம்' என்று சொல்லி யச்சுறுத்துதலும், அவள் உதைக்கும் உயிருக்கும் பயந்து உடன்பட்டு, கொப்பூழ் அறுப்பதற்கு மடக்குப்பிடி சூரியெடுத்து மடியில் வைத்துக் குன்றுடையான்பால் வந்தாள். அவன் அவளை யழைத்துக்கொண்டு சிற்றாலைப் பட்டணத்தை யடைந்து மனைவியினிடம் அனுப்பினான்.

இதற்குள் தாமரைக்கு விலாப்பக்கம் வலித்தது. அடிவயிறு நொந்தது, நெஞ்சு பிளப்பது போன்றது. அறிவு தப்பிற்று. அவள் சொக்கியைக்கண்டு, பிரசவ வேதனைபொறுக்கமுடியாமல், 'ஐயோ! அம்மா! வயிறு வலிக்கிறதே! எண்சாணுடம்பு ஒரு சாணாய்க்குலுங்குகிறதே!நான் என்ன செய்வேன்!புண்ணாக நோகிறதே! புந்தி பதறுகிறதே! எண்ணாத தெண்ணுகிறதே! வல்லமை குன்றுகிறதே! ஐயோ! வயிற்றில் துள்ளுகிறதே! விலாவில் தட்டுகிறதே! கொல்லாமல் கொல்லுகிறதே! நான் எப்படிப் பொறுப்பேன்!' என்று அரற்றினாள்.

மருத்துவச் சொக்கி 'அம்மா, பயப்படாதே தலைப்பேறு அப்படித்தான் இருக்கும். கண்மூடிக் கண் திறப்பதற்குள் பிள்ளையைப் பிறப்பித்து உன் உடம்பைத் தாய்பெற்ற மேனியாக்குகிறேன்' என்று உறுதி சொல்லி, விட்டத்திலிருந்து ஒரு கயிற்றைத் தொங்கவிட்டு,'அம்மா, இதைப் பிடித்துக்கொள், இதுஉனக்குப் பலம்' என்றாள். மேலும், 'அம்மா,தலைப்பேற்றை நீ கண்ணால் பார்க்கக்கூடாது,' என்று சொல்லி, ஒரு துணியால் தாமரையின் கண்களை மூடி மூன்றுசுற்றுச் சுற்றி இறுகக் கட்டிவிட்டுத் தாமரைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

தாமரைநாச்சியின் மணிவயிற்றினுள்ளே சிவபெருமான் அருளிச்செய்திருந்தபடி குடிபுக்கிருந்த குழந்தைகள் மூவரில் இளையாளாகிய தங்கை கனவுகண்டு கண்விழித்துப் பக்கலில் இருந்த அண்ணன்மார்களை நோக்கி, 'நீங்கள் பிறந்தவுடனே உங்களைக்கொல்லும் பொருட்டுக் கத்தியோடு காத்திருக்கிறாள் மருத்துவச் சொக்கி. அவள் எண்ணம் கைகூடாதவாறு நீங்கள் இருவீரும் நமது தாயின் விலாப்புறங்களிற் பிறவுங்கள். சின்னண்ணா, நீ பிறக்கும்பொழுது உன் காலால் எட்டி அவளை உதை' என்றாள். இதைக்கேட்டலும் சின்னண்ணன் எரிபறக்க விழித்து, வீரகண்டையணிந்த தன் பாதத்தால் சொக்கியை எட்டி உதைத்தான். அவள் மூன்று கரணமடித்து ஒரு மூலை சேர்ந்து மயக்கமுற்றுக் கண்மூடிக் கிடந்தாள். அப்பொழுது பெரியண்ணன் தாமரையின் வலது புறத்திலும், சின்னண்ணன் இடது புறத்திலும் பிறந்தனர். பிறந்த உடனே, இவர்கள்பொருட்டுச் சிவபெருமான் கட்டளைப்படி அங்கே காத்திருந்த மதுக்கரைச் செல்லாண்டியம்மன், இவர்களைத் தம் இருகரங்களிலும் ஏந்திச்சென்று தம் கோவிலிலே, நிலவறையில் வளர்த்து வந்தார்.

சிறிதுநேரஞ் சென்றபின் தங்கை, மங்களவாரம் புனர்பூச நக்ஷத்திரத்தில் உதித்து நிலத்தில் வீழ்ந்து 'குவா, குவா' என்று கத்தினாள். குழந்தை கத்தியதைக்கேட்டுச் சொக்கி கண்விழித்து, எழுந்துவந்து, மயங்கிக்கிடந்த தாமரையை எழுப்பி, கட்டவிழ்த்து, குழந்தையைக்காட்டி, குழந்தையை யெடுத்துக்கொப்பூழ் அறுத்தாள். தாமரை குழந்தையை வாங்கி ஈரந்துடைத்துப் பாலருத்திப் பொன்முகத்தை முத்தமிட்டாள்.

குன்றுடையான் உடனே, சோதிடர்களை யழைப்பித்துச் சோதிடம் பார்த்து, அவர்களுக்குச் சந்தனமும் பாக்கிலையும் ஐந்நூறு பொன்னும் வழங்கினான்; சொக்கிக்கும் தக்கவாறு வரிசைசெய்தான்.

தாமரை தன் பிறந்தஅகத்துக்கு வண்ணானை மாராய மனுப்பினாள். தாமரையின் சகோதரர்கள் மாராயங்கேட்டு, வந்த வண்ணானுக்கு ஒரு யானையைப் பரிசளித்தார்கள். வண்ணான் மீண்டுவந்து செய்திசொல்லக் குன்றுடையான் அவனுக்குப் பணமும், குலவழக்கப்படி எட்டுவள்ளக் கொட்டைமுத்தும் அளந்து கொடுத்தான்.

ஏழாய்நாள் தீட்டுக்கழித்தபின்,சொக்கி பாய்ச்சலூருக்குத் திரும்பிப்போய்ப் பங்காளிகளைக்கண்டு 'குன்றுடையானுக்கு ஒரு பெண்குழந்தை மாத்திரம் பிறந்தது, நான் தீட்டுக்கழித்துச் சோறுண்டு வந்தேன்' என்றாள். அவர்கள் கேட்டு மகிழ்ச்சியுற்று அவளுக்கு வெகுமதிகொடுத் தனுப்பினார்கள்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[272-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—7-ம் தசகம்

6-ம் பாசுரம்.

மதுசூதனை யன்றிமற் றிலேனென்
றெத்தாலும் கருமமின்றித்
துதிசூழ்ந்த பாடல்கள் பாடியாட
நின்றூழி யூழிதோறு
மெதிர்சூழல் புக்கெனைத் தோர்பிறப்பு
மெனக்கே யருள்செய்ய
விதிசூழ்ந்தா லெனக்கே லம்மான்
றிரிவிக் கிரமனையே.

பொழிப்புரை:—ஊழிதோறூழி அநேக யுகங்களி லெல்லாம் பல பிறப்புப்பிறந்தும், அவ்வகையான ஒவ்வொரு பிறப்பிலும் பகவானை ஒட்டியல்லது வேறு எந்த உபாயத்தாலும் எனக்கு யாதொரு புருஷார்த்தமும் இல்லையென்று திருடசித்தனாய் அவனையே ஸ்துதி பாடிக்கொண்டு நடந்தேன். இதற்குக் காரணம், அவனுடையவிதியே: அதாவது அருளாகிய ஆஞ்ஞையே. அதுதான் எப்படி வாய்த்ததென்றால், என்னுடைய ஒவ்வொரு பிறப்பிலும் என் ரக்ஷையின்பொருட்டு அவன் எனக்கேற்ப எதிர்த்தட்டில் உடன்வந்திருந்து எனக்குக் குருவாகவோ, தந்தையாகவோ நண்பனாகவோ தக்க துணையாகநின்று என்னைப் பக்திமார்க்கத்திலிருந்து நழுவவொட்டாமல் காத்து அருள்செய்ய அவனது சங்கல்பமாகிற விதியே உதவியது.

குறிப்பு:—இவ்வாழ்வாரின் துணிவு, பகவான்செய்த ஸகல அவதாரங்களும் பிறருக்கு உதவிசெய்யப் புரிந்திருந்தாலும் தனக்காகவும் தன் உகப்புக்காகவும் என்பதாம். ஆழ்வாரது ஒவ்வொரு பிறப்பிலும் பகவான் அவருக்கு அருள்செய்யத் தக்கபடி அவதரித்தானென்று கொள்வது உசிதமன்று. அங்ஙனம் "எதிர்சூழல் புக்கு" என்று பாசுரம் கூறுவது ஔபசாரிக மாய்ச்சொல்லியபடி. பகவான் தன்னை வசீகரித்துத் தாம் ஒருவரையே கவிபாடத் திருத்தினனென்பது தாத்பரியம்.

7-ம் பாசுரம்.

திரிவிக்கிரமன் செந்தாமரைக் கண்ணெம்
மானென் செங்கனிவா
யுருவில்பொலிந்த வெள்ளைப் பளிங்கு
நிறத்தனென் றென்றுள்ளிப்
பரவிப்பணிந்து பல்லூழி யூழி
நின்பாத பங்கயமே
மருவித்தொழும் மனமே தந்தாய்
வல்லைகாணென் வாமனனே.

குறிப்பு:-இப்பாசுரத்தில் ஆழ்வார் பகவானை நேரில் கண்டு விண்ணப்பம்செய்வதுபோல் பாடியிருக்கிறார். "திரிவிக்கிரமன் மூன்று உலகங்களையு மளந்து ஜயித்தவன்.

பொழிப்புரை:—வெகுஅழகான கண்களையும்திருப் பவளத்தையும் உடையவன்—புன்னகையுடையவன். இவற்றாலேஅவன்என்னை யடிமையாக்கினவனென்று நினைத்துநினைத்துப் பணிந்து பாடவும், இங்ஙனமே ஸதா ஸர்வகாலமும் உன்னுடைய பாதபங்கஜங்களையேமருவித்தொழும் மனமே தந்தாய்; வல்லைகாண் என் பிரபுவே—ஒருவருக்கும் செய்யவொண்ணா எல்லாம் செய்யவல்லவன் நீ ஒருவன் அல்லையோ" என்கிறார்.

8-ம் பாசுரம்.

வாமனனென் மரகத வண்ணன்
தாமரைக் கண்ணினன்
காமனைப்பயந்தா யென்றென் றுன்கழல்
பாடியே பணிந்து
தூமனத் தனனாய்ப் பிறவித் துழதி
நீங்க வென்னைத்
தீமனங் கெடுத்தா யுனக்கென்
செய்கேனென் சிரீதரனே.

பதக் குறிப்புக்கள் :—துழதி-துக்கம். பிறவித்துழதி-ஜன்மங்கள் எடுப்பதால் உண்டாகும் துக்கம். சிரீதரன் - ஸ்ரீமான், ஸ்ரீயைத் தரிப்பவன்.

பொழிப்புரை:— "உன் மரகதம்போன்ற வடிவழகையும் குணங்களையும் ஸ்வயம் பிரயோஜனமாகவே பாடி உன் திருவடிகளிலே பணிந்துகொண்டு ஸகல இடையூறுகளையும் போக்கும்படி என்னுடைய மனதை உன் திருவடிகளல்லது மற்றொன்று அறியாதபடி பண்ணினாய்; ஸ்ரீமானே, நான் உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்"-இப்பாசுரமும் பகவானுக்கு நேரில் செய்யும் விண்ணப்பமாகக் காண்பது அறியதக்கது.

9-ம் பாசுரம்.

சிரீஇதரன் செய்ய தாமரைக்
கண்ணனென் றிராப்பகல்வாய்
வெரீஇயல மந்துகண்க ணீர்மல்கி
வெவ்வுயிர்த் துயிர்த்து
மரீஇய தீவினைமாள வின்பம்
வளர வைகல்வைக
லிரீஇயுன்னை யென்னுள் வைத்தனையென்
னிருடீகேசனே.

குறிப்பு:—இப் பாசுரம் முன்னிரண்டு பாசுரத்தின் கருத்தையே தொடர்ந்து கூறுகின்றது. இருடீகேசன், ஹ்ரிஷிகேசன் என்கிற வடமொழியின் திரிபு. எல்லா இந்தரியங்களையும் இழுத்து நடத்துபவன். தன் திவ்விய ஸௌந்தரியத்தாலே ஆழ்வாரது எல்லா இந்தரியங்களையும் தனக்குவசமாக்கினவனென்பது இங்குத் தாத்பரியம்.

பொழிப்புரை:—ஸ்ரீ முதலான ஸ்ரீயப் பதியாகையாலும், எல்லாச்சம்பத்து முடையவனாகையாலும் தாமரைப் புஷ்பம்போல் கண்கள் உள்ளவனாயிருக்கையைத் தியானித்து அலமந்து வாய்விட்டுவெருவிக் கண்களில் தாரைதாரையாய் நீர்மல்கப் பெருமூச்சுவிட்டு மருவி என்னிடம் குடிகொண்ட தீவினைகளெல்லாம் நசித்துப் பேரின்பம் நாளுக்குநாள் வளர எப்போதும் என்னுள்ளே உன்னை இருத்திவைத்தருளினாய்! இப்படி உன் அழகாலே என்னுடைய ஸர்வ கரணங்களையும் உன்பக்கலில் விழுந்திருக்கும்படி பண்ணினாய்; உனக்கென்செய்வேன்.

10-ம் பாசுரம்.

இருடிகேசனெம்பிரானிலங்கையரக்கர்குலம்[றென்று
முருடு தீர்த்த பிரானெம் னமரர்பெம்மா னென்றென்
தெருடியாகினெஞ்சே வணங்கு திண்ணமறி யறிந்து
மருடியேனும் விடேல்கண்டாய் நம்பிபற்ப நாபனையே.

பொழிப்புரை:—ஓ என் நெஞ்சே, என்னுடைய ஸர்வ கரணங்களையும் இழுத்து அடிமைகொண்டவன் ராக்ஷஸர்களில் முரட்டுத்தனமாயிருந்த இராவணனை ஒழித்து விபீஷணனை ஸ்தாபித்ததுபோல் என்வசம் அடங்காத அஹங்காரமமகாரங்களை வென்று தன் தியாநத்திலே நிலைநிறுத்தினன். அவன் அயவறஅமரர்களுக்கு அதிபதி தான்என்று திருடமான விசுவாசத்தைப் பண்ணி வணங்கு. இவ்வர்த்தத்தைத் தெளிந்து கொண்டாயானல் ஒருக்கால் நீ மறந்தாயாகிலும் அல்லதுநீஅவனுடன் கலக்கத்தகாத தாழ்ந்தவனே என்று நினைத்து அவனைவிட்டு அகன்றாயாகிலும், அவனது பொன்போன்ற உந்தியின் அழகு உன்னையும் திரும்பி அவன் பக்கலில் இழுத்து அவனது பரிபூர்ண குணங்களைத் திரும்பியும் அநுபவிக்கச்செய்யும்.

குறிப்பு:—"பற்பநாபனை" என்று எடுத்தது அவனது உந்தியழகைத் தியானிக்க வேண்டுமென்னும் தாத்பரியம் உடையது. நம்பி-கல்யாண குணங்கள் நிறைந்தவன்.

11-ம் பாசுரம்

பற்ப நாப னுயர்வற
வுயரும் பெருந்திறலோ
னெற்ப ரனென்னை யாக்கிக்கொண்
டெனக்கே தன்னைத்தந்த
கற்பகமென் னமுதங் கார்முகில்
போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர் பிரா
னெந்தைதா மோதரனே.

பொழிப்புரை:—பற்பநாபனுகிய தாமோதரன் இதற்குமேலில்லையென்று சொல்லும்படியான (திறல்)வல்லமையும் தேஜஸுமுடையவன். அடியேனை ஒரு வஸ்துவாக நினைத்து என்பக்கலில் ஆதரவுசெய்து எனக்கே "யான்" அநுபவிக்கும் அஸாதாரணமான ரஸமாய்த் தன்னைக்கொடுத்தான். அவன் அயர்வற அமரர்களுக்கு அதிபதியானாலும் எனக்கும் தந்தைபோல் நின்றான். அதற்குச் சாக்ஷியாக அவன் நீருண்ட மேகம்போல் வேங்கடமலையில் ஸேவிக்க யோக்கியமாய் நிற்கிறான்.

குறிப்புக்கள் :—சென்றபாசுரத்தில், தம் நெஞ்சத்தை நோக்கி, பகவானைக் கைவிடாதேகண்டாய் என்றவர், "எனக்கே பரன்" எனக்கே தன்னை அநுபவிக்கக் கொடுத்தவன் என்று சொல்வதற்கு நிமித்தம், "எல்லோருக்கும் ஸ்வாமியாயிருக்கத் தம்மிடத்தில் அவன் விசேஷமாய்க் குறிவைத்திருப்பதால், அவனைக் கைவிட்டலோ வென்ற சங்கையைப் பரிஹரிக்கவென்று கொள்ளவேண்டும்.

தாமோதரன்:—ஜந்மமாகிய பந்தத்தை விடுவித்து மோக்ஷத்தைக் கொடுப்பவனென்பது பொருள். ஆசிரதரால் உரலில்கூடக் கயிற்றால் கட்டப்படுபவன் என்று சில உரைகாரர்கள் விசேஷம் குறிப்பார்கள்.

12-ம் பாசுரம்.

தாமோ தரனைத் தனிமுதல்வனை
ஞால முண்டவனை
யாமோ தரமறிய வொருவர்க்
கன்றே தொழுமவர்கள்
தாமோ தரனுரு வாகிய
சிவற்குந் திசைமுகற்கு
மாமோ தரமறிய வெம்மானை
யென்னாழி வண்ணனையே.

பொழிப்புரை:-தாமோதரனைப் ஆச்ரிதபாரதந்திரனைய், தனிமுதல்வனை-எல்லாஜகத்துக்களுக்கும் ஓரேகாரணனைய், ஞாலமுண்டவனை - யுகப்பிரளயத்தில் பூமியைத் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்தவனை, ஒருவருக்கும் தரமறிய வாமோ? என்றே - இப்படி யநுஸந்தித்துக் கொண்டே, தாமோதரனுருவாகிய-பகவானின் ரூபங்களான, சிவர்க்கும் - ஒவ்வொரு யுகம் ஆரம்பிக்குமளவு அதிகாரவிசேஷமாய்த்தோன்றும் பலபல சிவபிரான்களுக்கும், திசைமுகற்கும்- பலபல பிரம்மாக்களுக்கும், எம்மானை - என் ஸ்வாமியை, என் ஆழி வண்ணனை - சமுத்திரம்போல் நீலவர்ணமுள்ளவனை, தரமறியலாமோ - உள்ளபடி அறியக் கூடுமோ;

குறிப்பு:—இவ்வண்ணம் மாட்சிமை பொருந்தியவனல்லனே என்பரன் என்று முன்பாட்டிலிருந்து கூட்டிமுடிக்க.

13-ம் பாசுரம்.

வண்ண மாமணிச் சோதியை
யமரர் தலைமகனைக்
கண்ணனை நெடுமா லைத்தென்
குருகூர்ச் சடகோபன்
பண்ணிய தமிழ்மாலை யாயிரத்
துள்ளிவை பன்னிரண்டும்
பண்ணிற் பன்னிரு நாமப்பாட்
டண்ணல்தா ளணைவிக்குமே.

பொழிப்புரை:—நீலமணித் தேஜஸையுடைய, அமரர்கள் தலைவனை கிருஷ்ணவதாரம் எடுத்த பெரும் புகழ்பெற்றபெருமானைத் தென்குருகூர்ச் சடகோபன் செய்த இவ்வாயிரத்துள், அவனுடைய துவாதச நாமங்களைபற்றிப் பாடிய இத்திருவாய்மொழி அவன் திருவடிகளை அணைவிக்கும்.

குறிப்பு:—இத்திருவாய்மொழி பகவானது ஆசிரதர்களின் ஸம்பந்த ஸம்பந்திகளையும் தனக்குத் தாஸர்களாக்கி இரக்ஷிக்குமென்று கூறுகிறபடியால் இந்தப் பத்து, ஆசிரதர்களின் "ஸ்வஜந ஸுஹிர்த்து" என்ற பகவத்குணத்தைக் கற்பிக்கின்றது.

ஏமாங்கத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரைசைவாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

தமிழ்ப் பாடம் 15.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[266-வது பக்கத் தொடர்ச்சி]

நளனுக்கும் அன்னத்திற்கும் இடையே இதுகாறும் நடைபெற்ற நாடகத்தை மறுபடி நம்முன் இங்கு நிகழ்த்திக்கொள்வோம். பூஞ்சோலையெய்திய நளனுக்கு எதிரே தோன்றிய அன்னப்பறவையை அவன், அஞ்சாயல் மயிலனைய மாதர்கள் பிடித்துத்தரப் பெற்றுக் கொண்டான். என் செய்வானோ இவன் தன்னை, என அவ்வன்னம் கலங்கியது. கலங்கிய அன்னத்தின் கவற்சிதீர நளன், அதன் நடையையும் தன்னுடுவந்த மடவார் நடையையும் அழகினில் விஞ்சியது எதுவென ஒப்புநோக்குதற்கே தான் பிடித்ததாகப் புன்னகை கலந்த தன்மொழிகளால் விளம்பினன். இதனைக் கேட்டுத் தடுமாற்றந் தீர்ந்த அன்னம் மகிழ்வெய்தி அவன் தோள்களுக்குத் தகுந்தவள் தயமந்தியே எனக் கூறி, அன்னாள் பெண்மையின் பெருமையும் மேன்மைசால் அழகையும் செவ்விய சொற்களால் நயம்படச் சாற்றியது. கண்ணிற் கண்டிலானேனும் இவ்வருணனைக்குப் பொருளாகிய தமயந்தி இவனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டனள். இத்துணைத் திருவமைந்த ஒருத்தியைத் தான் மணாட்டியாகப் பெறப்பெறுவானோ என்னும் தியக்கம் அவன் மனதில் பெருகப் பின், அக்கருமம் ஆவதெனில் அவ்வன்னத்தினாலேயே இயலும் எனத் துணிந்தான். எனினும், அன்னத்திற்கு அவளோடு ஏதேனும் உறவு உண்டோ இல்லையோ என்னும் சந்தேகம் அவனுக்குப் பிறந்தது. ஆதலாற்றான் முதலில், "உனக்கு அவளோடு என்னை அடைவு" என வினவினன். இதற்கு அன்னம் கூறிய மறுமொழியிலிருந்து, வேண்டுமெனின் தம்மணத்தை அதனால் முடித்துவைக்கக்கூடும் என்பது நிச்சயமாயிற்று. ஆனாலுமென்ன! அவ்வன்னம் இதற்குஉடன்படவேண்டுமே. தன்னிடத்திலே தமயந்தியைப்பற்றி வருணித்ததிலிருந்து அவ்வன்னத்திற்குச் சொல்திறம்மிகவுளது என்பது தெரிந்த அவன், இப்படியே தன்னைப் பற்றியும் அவளிடத்தில் சாதுரியமாகச் சொல்லித் தன்னை அவள் ஏற்றுக்கொள்ளுமாறு முயலுதற்கு அது மனங்கொள்ள வேண்டியது முக்கியம் என உணர்ந்தான். இந்த எண்ணத்தையுடைய நளன் அன்னத்தைச் சிறிது முகத்துதியுஞ் செய்து, "தமயந்தி அத்தகைய சிறப்புடையவளாயின், அவளோடு உனக்கு அடைவும் உண்டாயின், அவளைப்பற்றி நீ என்னிடத்தில் பேசிய நயத்தினால் எனக்கு அவள்பால் காதல் விளைவித்ததுபோலவே, என்னைப்பற்றியும் அவளுக்கு நயமாகச் சொல்லி அவளுக்கும் என்மீது காதல் உண்டாகும்படி நீ செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்; இதற்கு நீ இணங்காயாயின் பின் நான் உயிர்வாழ்தல் அரிது" என்னும் இத்தனைக் கருத்துக்களும் அடங்க, "இனி உன்வாயில் இருக்கின்றது என்னுடைய வாழ்வு" எனவொரு வாசகம் இயம்பினன். திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தன் ஒருவன், தன்னை இவ்வாறு வேண்டக்கண்ட அன்னம் "காதலுற்றவர் கதி இதுவோ" என்னத் தன்னுள் சிறிது நகைத்துப் பெருமைநிலவிய முகங்கோட்டி, 'அரசே, அங்ஙனமே செய்கின்றேன்' என்று அபயம் அளித்து அகன்றது.

போன வன்னம் மீளுமளவும் பொறுக்கமாட்டாத வனுகி நிமிடம் ஒவ்வொன்றையும் நெடுங்காலமாக்கிச் சோலையின்கண்ணே காத்திருந்தான் நளன். சித்தப்பிரமையுற்றிருந்த அவன்நிலைமிகவும்பரிதற்குரியதாயிற்று. சேவல் குயில்பெடைக்குச் சிறுகுரலால் பேசியதுகேட்கச் சகியான். மையற்கடல் சுழிகொண்டு மனத்திற் பொங்கக் கண்ணடங்கலும் அன்னத்தின் தோற்றத்திற்கும், செயவிடங்கலும் அதுவந்து தனதினியாள் திருப்பேரைச் சொல்லக்கேட்பதற்கும் அவாவினால் அர்ப்பணம் செய்திருந்தானதலால், வெறித்த அவன் கண்கள் அன்னம் மீண்டுவருவழிவிட்டுஅகலாதுதைத்திருந்தன. அம் மலர்வனத்தில், வண்டுகளின் இசையிலும் குயிலின் குரலிலும், சிலந்தி யொன்று சருகூடு அசைந்தாலும் அவன் அவ்வொலிகளில் தனதருந் தமயந்தியின் திருநாமமே கேட்கலாயினன். தூரத்தே படர்ந்துவருகின்ற வெண்மேகம் ஒவ்வொன்றும் அவன்கண்களுக்கு அன்னம் வந்ததென்றே தோன்றியது. அன்னம் சென்றிருந்த திசையில் மஞ்சொன்று தோன்றிற்றென்றால், வந்தது தன்னரும் அன்னப்பறவையென்று ஆவலோடு வேந்தன்காத்திருக்க, அம்மேகம் மெள்ளமெள்ள ஊர்ந்துசென்று இவனருகு இறங்கமால் தலைக்குமேல் பரந்தகன்றுவிடுகின்றது. காத்திருந்த கிள்ளைக்கு இலவு பஞ்சாய்ப் பறப்பதுபோல் நளனுக்கும் அன்னமெல்லாம் மஞ்சாய்க் கழிந்தன. எனினும், மரத்தினிலுள்ள ஒவ்வொரு பழமும் வெடிக்கும்வரை, கிளி 'இதுவேனும் பழுக்காதோ, மற்று, இதுவேனும் பழுக்காதோ' வென்று ஆசையால் தன் முன் னனுபவத்தையும் மறந்து எதிர்பார்ப்பது இயற்கை. மன்னனும், அன்னம் என்று எண்ணிய ஒன்றுதான் பொய்யாய்ப்போயிற்றே எனத் தேராது பின்னும்பின்னும் மேகத்தை அன்னம் என்று எண்ணினன். காதலால் விளையும் பேதைமை பெரிது.

இன்னணம் மயங்கிய மனத்தனாய அம்மன்னவன் கடைசியில், போன மேகங்களெல்லாம்போகப் பின்நிசமான அன்னமே அணுகக்கண்டான். அணுகிய அன்னமும் இறங்கிக் கருமத்தை முடித்துவந்த ஏமாப்பினோடு அவன்முன் நிமிர்ந்துநின்றது. இனி இங்கு நடப்பதைக் கூறுகின்ற நம் கவியின் நயத்தை நன்கனம் துய்க்கவேண்டுமாயின், சற்றேறக் குறைய இவ்விதநிலையைப்பற்றி ஷேக்ஸ்பியர் நாடகமொன்றினில் வருகின்ற பாகத்தைச் சொல்வது நலமாகும்:—

வெரோனா நகரத்தில் வாழ்ந்த ரோமியோ என்னும் செம்மலும் ஜூலியட் என்னும் வனிதையும் ஒருவர்பால் ஒருவர் அளவிலாக் காதல் கொண்டிருந்தனர். இவ்விருவரும் அந்நகர்ப் பிரபுக்களின்மரபைச் சேர்ந்தவர். அவர்தம் தந்தையர்க்குள் குலப்பகையொன்று தொடர்ந்துவந்தது. ஆதலால், பகைக்குடி பிறந்த இக்காதலுக்குப்பெற்றோர் இணங்கிமணம்நேர்வதற்கில்லை. பிறரறியாது ரோமியோவும் ஜூலியட்டும் புரிந்துவந்த காதல்முதிர்வடைய, இருவரும் அந்தரங்க விவாகம் செய்துகொள்ளத் துணிந்தனர். அவ்வாறு துணிந்தாரேனும் பெற்றோர் அறியாமல் அதனைமுடிப்பது எளியதன்று. இதற்குத்தக்கபடி ஏற்பாடுகள்செய்யவேண்டும்.

அதுவுமன்றித் தன் தந்தையின் பகைவனது மகளை மணப்பதற்கஞ்சி ஒருவேளை ரோமியோ அந்தத்தில் கைவிட்டால் என்செய்வது என்னும் ஏக்கமும் ஜூலியட்டிற்குச் சிறிதிருந்தது. இதற்கிடையில் வேறொருவனை மணஞ்செய்துகொள்ள அவளது அன்னேயோ வற்புறுத்திவருகின்றனள். இந்த நிலையில் ஜூலியட், வயதுமுதிர்ந்த தனது செவிலித்தாயை ரோமியோவினிடம் இரகசியமாகத்தூதனுப்பி எந்தவிதம் அந்தரங்க விவாகம் பாதிரியின் முன்னிலையில் புரிந்துகொள்வதெனக் குறியிடமும் காலமும் தெரிந்துவர ஏவினாள். சென்ற செவிலியின் வரவுநோக்கிய காதலியின் செய்தியையும் அவள் வந்தபின்னர் நிகழ்வதையும் ஷேக்ஸ்பியர் வாக்கையே தழுவி மொழிபெயர்த்துச் சொல்லுவோம்.

ஜூலியட் (தனியாய்)

ஜூலியட்:—நாழியும் ஏழே அவளை யான் அனுப்பியபோது. அரைமுகூர்த்த நேரத்தில் வருவதாகச் சொல்லினள். ஒருகால் அவனைச் சந்திக்கத்தான் நேர்ந்ததில்லையோ! அன்றன்று, அவ்வாறிராது. ஓ,நொண்டியே இவள்! மலைமீது நிழலகலத் தவழுமக் கதிரோன் கிரணங்களினும், மனத்தூடு இருளகற்றிப் பதின் மடங்கு வேகமாய்ப் பாயவல்ல அவரவர் கருத்தேயன்றோ காதலுக்கு உரிய தூதுதான் ஆகவேண்டும். ஆதலாற்றான், காமனுக்குத் தேரும் காற்றாகிக் கிளிகளே குதிரையாய் இழுத்து விரைகின்றன. பரிதியும் இந்நாள் நண்பகல் எய்திவிட்டனன். ஏழுமுதல் பதினைந்துவரை—நீடிய நாழிகை எட்டும் ஆயின—இன்னும் வந்திலள். அன்பின் செய்கையும் இளமையின் ஆர்வமும் அவளுக்கு இருக்குமாயின் பந்தென அவளும் விரைவொடு படர்வள். உந்திய என்சொல் கொண்டுபோ யவளை எனதினிய காதலன்பால் சேர்த்திருக்கும். மற்று அவன்சொல் உந்த என்பால் வருவாள். பந்தின் செய்தி மூப்பிற் கேது! முதிர்கிழச் சனங்கள் செத்தவ ரொத்தவர்; அசையாத் தேகம், பெரிய பாரம், ஈயமங்கல்—அப்பாடா! இதோ வந்துவிட்டாள்.

[செவிலி வருகின்றாள். அவளது ஆள் பீடர். என்பவனும் கூட வருகின்றான்]

ஜூலியட்:-தேனனைய என்தாயே, செய்தி என்ன? கண்டதுண்டோ எனதன்பை? உனதுஆள் இவனையனுப்பிவிடு.

செவி:—பீடர், நீ போய் வாயிற்படியண்டை இரு.
[பீடர் போய்விடுகிறான்]

ஜூலியட்:—என தருமைச் செவிலி, இனியாய்,—ஓ, தெய்வமே,ஏனிப்படித் துன்பமயமாய் நீதோன்றுகின்றாய்! சொல்லவரும் செய்தி துன்பமாயிருந்தாலும்உவகையோடுரைத்திடு;மற்று,நல்லதாயின், இனிய செய்தியின் திவ்விய நாதத்தைக் கோணிய உன் முகத்தால் இசைத்துக் கெடுக்கின்றாய்.

செவிலி:—மிகவும்களைப்பாயிருக்கின்றது எனக்கு மூச்சுவிட நேரங் கொடு. சீ! சீ! எலும்பெல்லாம் என்ன நோவு! அப்பா! என்ன அலைச்சல் அலைந்துபோனேன்!

ஜூலியட்:—என்னுளே இருக்கும் எலும்பு உனக்கும் உன்னுளே இருக்கும் செய்தி எனக்கும் மாறி இருத்தலாகாதா! இந்தா, வேண்டிக்கொள்கின்றேன், விரைவிற் சொல். நல்ல நல்ல மிக நல்ல என் செவிலியே, சொல்.

செவிலி:—அட கடவுளே! என்ன ஆற்றாமையடா! சிறிது பொறுக்கப்படாதா! எனக்கு மூச்சுவாங்குவது தெரியவில்லையா?

ஜூலியட்:—மூச்சு போகின்றதென்று சொல்வதற்கு மூச்சு இருக்கும் நீ, மூச்சில்லையென்று எனக்கு எவ்வாறு சொல்லுவாய்? இந்தத் தாமதத்திற்கு நீ சொல்கின்ற காரணம், சொல்லவேண்டிய செய்தியைவிட நீண்டதா யிருக்கின்றதே. நீ சொல்லத் தாழ்வது நல்லதோ, கெட்டதோ? அதைச்சொல். எதுவாயிருப்பினும் இருக்கட்டும்; எதையும் சகிப்பேன்; எனக்குத் தெரிந்தால் போதும். நல்லதோ, அல்லதோ?

செவிலி:—இருக்கட்டும்;தக்கபுருடனைத் தேர்ந்தெடுக்கத்தெரியாது உனக்கு.ரோமியோவா! இல்லை, அவனில்லை. எவர் முகத்தையும் விட அவன்முகம் நன்றாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும், அவன் கால்களோ எல்லார் கால்களையும்விடச்சிறந்தன.கையென்ன, பாதமென்ன, உடலமென்ன—இவைகளை யெல்லாம் பற்றிப் பேசப்படாதுதான்—இருந்தாலும் அவைகளுக்குச் சமானம் ஒன்றுமில்லை: விநயந்தான் அதிகம் தெரிந்தவ னல்லன்—ஆனால், குழைந்தையைப்போலச் சாந்தமாயிருக்கின்றான்-இதற்கு நான் பணயம். வேலையைப் பார்த்துக்கொண்டு போ, பெண்ணே; கடவுளைத் தொழுதிடு, போ—என்ன, வீட்டிலே எல்லாரும் சாப்பிட்டாய்விட்டதா, என்ன?

ஜூலியட்:—இல்லையில்லை—இவையெல்லாம் எனக்கு முன்னரே தெரிந்தன. எங்கள் கலியாணத்தைப் பற்றி என்ன சொன்னான்? அதைப்பற்றி என்ன?

செவிலி:—அடதெய்வமே! என் தலை எப்படி வலிக்கின்றது தெரியுமா? அப்பாடா என்ன தலையோ-என் தலை, இருபது துண்டுகளாய் வெடிப்பதுபோல் இடிக்கின்றது—இந்தப் பக்கம் முதுகு ஒன்று—ஐயோ, முதுகே, என் முதுகே! திரிந்தலைந்து செத்துப் போடு என்றுஎன்னை அனுப்பிவைக்க உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ, போ!

ஜூலியட்:—வாஸ்தவமாக, உனக்கு உடம்பு நேராக இல்லையே யென்று எனக்கு வருத்தமாயிருக்கின்றது. இனியாய், இனியாய், இனிமைசால் செவிலி, சொல்லெனக்கு; எனதன்பன் யாது செப்பினான்? காதலன் கூறியதேதெனச் சொல்வாய்!

செவிலி:—உன் காதலன் சொல்கிறான்–மெய்யன், மரியாதையுடையவன், அன்புடையவன், அழகன், சீலமுடையவனுங் கூடத்தான்—உன் தாயார் எங்கே?

ஜூலியட்:—என் தாயார் எங்கேயா! இதென்ன கேள்வி; உள்ளே இருக்கின்றாள். வேறெங்கிருப்பாள்? நானென்று கேட்டால் நீயொன்று சொல்கின்றாய்! "உன் காதலன் சொல்கின்றான்......உன் தாயார் எங்கே?" இதுவா வார்த்தை!

செவிலி:—அட கடவுளே; ஓகோகோ! என்ன! பற்றி எரிகின்றாயா நீ! அப்பாடா, வழிக்கு வந்துசேர். இதென்னடாப்பா இது! இதைப் பார் பெண்ணே, என் எலும்புவலிக்குத் தைலம் இதுதானா பார்? மாட்டாயா, ஆனால், இன்றுமுதல் உன் காரியத்திற்கு நீயே போய்க்கொள்.

ஜூலியட்:—அப்பா, என்ன சிடுக்கு!—இந்தா, ரோமியோ என்ன சொன்னான்?

இதன்மேல் ரோமியோ அன்றிரவே ஒரு பாதிரியின் வீட்டில் விவாகத்திற்கு ஏற்பாடு செய்திருக்கின்றானென்றும், இவள் மனையினின்று வெளிப்படுவதற்கு நூலேணி கொண்டுவருவானென்றும் செவிலி சொல்லி ஜூலியட்டின் ஆவலைத் தீர்த்தாள்.

அன்னமும் முதலில் இச்செவிலி செய்தபடிசெய்தது. ஆனால்நளனுக்குத்தான் ஜூலியட்டின்திறமை இல்லாமற்போயிற்று. ஆதலால் அவளறிந்தபடி முடிவை இவனறியமுடியவில்லை. நம்பொருட்டுஒருகாரியத்தின் மேல் சென்றவர், அதைச் செவ்வனே செய்துவிட்டாரானால், முடிவை எளிதில் சொல்லமாட்டார். செய்துமுடித்த ஏமாப்பினால், பொறுமையின்றி நாம் சிறிது வருந்தக்கண்டபிறகேமெள்ளமெள்ள 'நீட்டி முழக்கிச் சொல்லப்புகுவது இயற்கை. இத்தகைய தூதர் ஆணாயினும் பெண்ணாயினும் பறவையாயினும் வித்தியாசமின்றிநடப்பர். ஆனால், இந்தச்செய்தியைக் கேட்பதற்குஆவலால் அலைகின்ற புருடனுக்கும் பெண்ணிற்கும் வித்தியாச முண்டு. எல்லாப்படியாலும், திடசித்தமும் நோக்கத்திற்கேற்ற கருமமும், கருமத்திற்கேற்ற சூழ்ச்சியும் கையாள்பவர் பெண்பாலாரே. காதலிலேனும் கற்பிலேனும், மற்றுத் தீமையே யொன்று செய்யப்புகினும், நடுவில் தளராமல், உற்றசிறு இடையூற்றிற்கெல்லாம் உடைந்திடாமல், கருமமே கண்ணாகிச் சமயசாத்திமாய் நடந்துகொள்ளவல்லவர் மாதர். அவரைப் பேதையர் என்றழைப்பது பெரும் அபவாதம். அவளுக்கு அப் பேரிட்ட புருடன்தான் பேதை. அரியதொரு நிலையினில் ஆடவர், மனமொன்று எண்ண வாயொன்று பேசக் கையொன்றுசெய்யக் கிடந்துழல்வார். பெரும்பான்மை இவர் பிடிக்கும் பிள்ளையார் எல்லாம் குரங்காகவே முடியச் சரித்திரங்களிலும்இதிகாசங்களிலும் நம் வாழ்க்கைச் சித்திரத்திலும் காண்கின்றோம். கைகேசிக்குமுன் தயரதன் பேதையாயினான். சீதைக்கு எதிரே இராமன், பொய்மானால்பிரிந்தபோதும் பின் சிறைநீக்கிச் சேர்ந்தபோதும் பேதையேயாயினன். பாஞ்சாலிக்குமுன் பாண்டவர் பேதையராயினர். நம்தமயந்திக்கு எதிரே நளராசனும் பேதையனாகக் காண்பீர். ஷேக்ஸ்பியர்நாடகங்களை ஆழ்ந்து ஆராய்ந்திருப்பவர் யாவர்க்கும் இவ்வுண்மை தெள்ளிதின் புலப்பட்டிருக்கும்.

அதுவும், காதலுற்ற புருடனதுசெய்கைகள் சமயத்திற்குத் தக்கனவா யிருக்குமென்று ஒருபோதும் நம்பலாகாது. காதற்கவற்சியால் ஓராச்செய்கை பல புரிவான் அவன். காதலிலும் மாதர் சிதறாத கருத்துடையவராதல், ஊக்கத்திலும் உணர்ச்சியிலும் அவர்குறைந்தவரா யிருத்தலாலன்று; அறிவினது நுணுக்கம் அவர்க்குஅதிகமாதலே காரணம். இதனால், 'பேதைமையென்பது மாதர்க்கணிகலம்' என்னும் மூதுரை பொய்த்ததென எண்ணற்க. பெண்மைக்குப் பேதைமை இயற்கையா யமைந்திலது. வேண்டும்போது அதனை அவர் எடுத்தணிய வல்லார் என்பதே இவ்வாசகத்தின் கருத்து. ஆழ்ந்த அன்புடையவர், அன்பிற்கேற்ற அறிவும் உடையவர், தூய்மையும் வாய்மையும் வாய்ந்த மாதராலன்றோ இப்பூதலம் நடைபெறுகின்றது. புருடனை மாத்திரந் தனியாய்விட்டால் அவன் தனது வாழ்க்கையைக் குரங்கின்கைப் பூமாலையாய்ச் சிதைத்துக்கொள்வான்.

கேட்பதை நேராகக் கேட்கவும் கருமத்தை நேராகச்செய்யவும் கூடியவோர் பெண் ஜூலியட்; ஆதலால் செவிலி வந்ததும் அவளை, ரோமியோ என்ன சொல்லினான் என்று கேட்டாள். நளனோ, அன்னத்தின் முகம்பார்த்து அருள்நோக்கிச் செய்தியைக் கேட்காமல்கேட்டு யாசித்தான். கேட்டாலே எளிதிற் சொல்லார் காதல்தூதர். ஜூலியட்டின் செவிலி அந்தக் கேள்விக்குப் பதிலாய், போய்வந்த பெருமூச்சு அடங்குமுன் யாதும்தன்னால் பேசமுடியவில்லையென்று வாய் கூசாதுசொல்லி யப் பெண்ணிற்குப் பொறுமையைப் போதித்தாள். நளனோ கேட்காமலிருக்க அன்னம் ஒன்றும்சொல்லாமலிருந்தது. சிறிதுபோது அன்னம் சொல்லட்டுமேஎன்று இவனும், நளன் தன்னை இரந்து கேட்கட்டுமே என்று அதுவும் சும்மாவிருக்க, ஆற்றாத நளன் இதன்பிறகேனும், "அன்னமே, நீ சென்ற கருமம் எவ்வாறு முற்றியது?" என்று வினவியிருக்கலாமே. அதை விட்டுவிட்டு 'அன்னகுலத்தின் அரசே,' எனத் தோத்திரம் செய்தாலேனும் செப்புமோவெனச் சிறிது தாழ்கின்றான். அன்னம் இன்னும் வாய்திறக்கவில்லை. அதன்மேல், 'அழிகின்ற என்னுயிரை மீள எனக்கு அளித்தாய்,' என 'உன் முகப்பொலிவினாலேயே தமயந்தி என்னை மணக்க நேர்ந்தனள் என்று தெரிகின்றது' என்னும் குறிப்பில், சொல்வதுபோல் வினவி, அது 'ஆம்' என்றாலாகாதாவென ஆவலுடன் பதிலை எதிர்பார்க்கின்றான். இவ்வாறு குறிப்பினிற் கேட்பானேன்? ஜூலியட்டைப்போல் இவன் அன்னம் வந்ததும் தனது இனியாள் யாதுகூறினாள், என்று கேட்கப்படாதோ? நளன் புருஷன், ஆதலால் அவ்வாறு கேளான். ஒருவேளை அது விரோதமாகச் சொல்லிவிட்டால் பின் எவ்வாறு ஆற்றுவது எனும் அச்சமும், சாதகமாயின், தாழாது தெரிந்துகொள்ள ஆவலும் உள்ளத்தில் ஒன்றையொன்று இழுப்பதும் தள்ளுவதுமாக இவன் கேட்பதும் கேட்காததுமாய் விவகரிக்கக் காண்கின்றோம். தந்தி (telegram) வந்தால் அதை உடனே பிரித்துப் பார்க்காமல் மேலும் கீழும் ஆராய்ந்து வதந்தி எதுவா யிருக்குமென்று ஊகிக்கத் தலைப்படுகின்ற மனதின் தத்துவமும் ஒரு சிறிது இந்நிலையை ஒக்கும். அன்னகுலத்தின் அரசே, என்று நளனும் தூதனைத் துதித்தான்; ஜூலியட்டும், நல்ல நல்ல மிக நல்ல என் செவிலியே, என்று தனது தூதியைத் துதித்தாள். ஆனால், இவள் 'சொல்' என நேராகக்கேட்டுமுடித்தாள். அவனோ அன்னம் சொல்லாமுன் சொல்லிவிட்டதாகப் பாராட்டி, பெறாத தன்னுயிரைப் பெற்ற பாவனை புரியமுயன்றான். இன்னவாறு இவன் கிடந்துழல்வது, முடிவு யாதாயினும் பொறுப்பதற்கேற்ற நெஞ்சத்திட்பம்இல்லாதகாரணத்தால் நிகழ்கின்றது. மற்றவரை மருட்டுவர் ஆடவர். தமக்கொன்றுநேர்வதெனின் தாங்கும்வகை யறியார்.

கேளாரை வாளால் விருந்திட்ட மன்னன் திறம் இதுவாயின், பெண்மையால் நொய்ய ஜூலியட் இதே நிலையில் யாதுசெய்தாள். ஆடவர்களைவிடப் பெண்களுக்குச் சுகதுக்க சமத்துவபாவனையும் எத்தகைய சந்தர்ப்பத்திலும் மனவமைதி பாராட்டும் வன்மையும் அதிகம். தீங்கு பெரியதேனும் தாங்குந்திறம் அவர்களுக்குண்டு. ஆதலால் அவள், "நீ சொல்லத் தாழ்வது நல்லதோ, கெட்டதோ? அதைச் சொல். எதுவாயிருப்பினும் இருக்கட்டும்; எதையும் சகிப்பேன்;

எனக்குத் தெரிந்தால் போதும். நல்லதோ அல்லதோ?" எனக் கேட்பதற்கு இசைந்து, "சொல்" என்று விதித்தனள்.

ஜூலியட் வெளிப்படையாய்க் கேட்ட செவிலியும் சொல்லவில்லை; விஷயத்தை நளன் குறிப்பாய்க் கேட்ட அன்னமும் சொல்லவில்லை. செவிலி வேறு ஏதேதோ பேசினாள், அன்னம் வாயே திறந்திலது. இந்த விதத்தில் கிழச்செவிலியும் மடவன்னமும் காதலர்க்குத் தூது சென்றவர் குறும்புத் தொழிலைத் தவறாது காட்டினர். ஆனால் அத்தகைய ஓரேநிலையில் வெரோனாநகர வனிதை நடந்துகொண்டவிதம் வேறு, நிடதநாட்டரசன் நடந்துகொண்டவிதம் வேறு. ஜூலியட் பின்னும் பின்னும் பொறுமையைக் கையாண்டு 'நல்ல நல்ல மிக நல்ல என் செவிலியே, சொல்,' என்றும், "இனியாய், இனியாய் இனிமைசால் செவிலி, சொல்லாய்", என்றம் பரிவினோடு மென்மொழிகள் பாராட்டி வேண்டினாள். அத்துணைப் பொறுமை நளனுக்கு இல்லை, மிக விரைவில் சலிப்படைந்து விட்டான். உரத்த குரலில், "ஏ, அன்னமே, நீ பேசாமலிருப்பது, உரைக்கும் வன்மை உன்மாட்டு இல்லாததாலன்று. "வீமன் திருமடந்தை மென்முலையை யுன்னுடைய வாமநெடும் புயத்தே வைகுவிப்பேன்," எனவெல்லாம் 'முன் பயின்ற மொழிகள் இப்பொழுது வறண்டெங்குப் போயின? உனக்கு என்ன கேடு!" என ஓர்வசையை வழங்கினான். தமக்கொரு இடையூறு அதனால் வருமெனில் பெண்டிர் தம் சினத்தைக் காப்பர்; புருடருக்குப் படபடப்பு அதிகம்.

இதன்மேல் செவிலி, வேண்டுகோளை மறுக்க முடியாமலும், அன்னமோ, அவன்காட்டிய கோபத்திற்கு மாறாகவும் வார்த்தை சில பேசவாரம்பித்தனர். ஆனால் இன்னும்விஷயம் வெளிவரவில்லை. ரோமியோவை வருணிக்க ஆரம்பித்தாள் செவிலி. தான் போனதும் பார்த்ததும், தமயந்தி தனியிடம் சேர்ந்ததும் யாவும் ஒன்றுவிடாமல் விரித்துரைக்கப் புகுந்தது அன்னம்:—
"நான் உன்னை விட்டுப் போனேனா. போ போ என்று போனேன்; இதற்கும் விதர்ப்பநாட்டிற்கும் இடைநின்ற தூரம் சிறியதோ! என் சிறகெல்லாம் சோர்ந்து போயின. சரி, விதர்ப்பதேய மடைந்தேன். அங்குத் தமயந்தி மானினம் வருவபோலும் மயிலினம் திரிவபோலும் தன் தோழியர் புடைசூழச் சோலைபின்கண் விளையாடிக்கொண்டிருந்தனள். நான் மெள்ளச் சென்றேன். சென்றதும், அவள் பாங்கியரை விட்டுப் பிரிந்து தனியானவோர் இடத்திற்கு என்னோடு வந்து சேர்ந்தனள். ஆகா, என்ன அழகு! விளையாட்டினது ஊக்கத்தால் சிறிது சிவந்திருந்த அவளது கன்னங்களின் பொலிவைக்காணக் கொடுத்துவைத்த என் பாக்கியமே பாக்கியம். பிறகு அவள், 'அன்னமே, எங்கு வந்தாய், என்ன செய்தி' எனத் தன் சொல்லெனும் பாகை என் செவியகம் பாய்ச்சினாள். நானும் சொன்னேன். "நான் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து நிடதநாடு சென்றபோது அங்கு ஓர் சோலையின் வனப்பு என் மனதைக் கவர்ந்துவிட அதனுள் இறங்கினேன். அப்பொழுது சில மாதர் என்னைப் பற்றிக் கொண்டுபோய் ஒரு அரசன்முன் வைத்தார். நான் நடுங்கிப் போயினேன். அவனோ மிகவும் கருணையோடு என் நடையையும் அம்மாதர்தம் நடையையும் ஒப்புநோக்குதற்கே பிடித்தானெனச் சொன்னான். இதனைக்கேட்கக்கலக்கந் தீர்ந்தேன். என்னைப் பிடித்த வேந்தன், மாதே, எத்தகையவனென்று எண்ணுகின்றனை. செம்மனத்தான், தண்அளியான், செங்கோலான், மங்கையர்கள் தம் மனதை வாங்கும் தடந்தோளான், மெய்மை விடாதவன்' என்று உன்னைப்பற்றிச் சொல்லி, உன் திருநாமத்தையும் இயம்பி, நீயே அவளுக்குத் தகுந்த நாயகன் என்பதையும் காட்டினேன். செங்கண்மால் உனக்கு நிகராயின் ஆகலாம், அல்லாது வேறு இம்மண்ணுலகு ஆளும் வேந்தர்யாரும் நினக்கு நிகரல்லரென்றும் சொல்லினேன்........" இவ்வகைத் தன் மொழிக்குத் தீதிலதென்று சாதிக்க அன்னம் உரைவளர்த்தபோது, முடிவுகாணாமல் நளன் பொறுமையழிந்தான். செவிலியும் இப்படித்தான், ரோமியோவின் காலுக்கும் கையிற்கும் நிகரில்லை யென்ற வாய்மையை ஓயாது செப்பினாள். ஆனால், ஜூலியட், "நானொன்று கேட்டால் நீயொன்று விளம்புகின்றனையே. இவையெல்லாம் நான் முன்னர் அறிந்துளேன். மற்று, முடிவைச் சொல்' என்று மறுத்து வினவுதற்கு வேண்டியபடி தன்வயத்தளாய் இருந்தாளாதலால், 'நும்மணம் முடியும்' என்று செவிலி சொல்லவும் அவள் கேட்கவும் இயலலாயிற்று. எளிதிலே புருடன் தன்வயம் துறப்பான். பெருகிய அன்னத்தின் உரைகள்யாவும் அவன் அறிந்தனவாயிருக்க இடைமறித்து அதனை "உற்றது போதும், மேல் உறுவது உரை" என ஆணைதரும் ஆற்றல் இலனாய் உள்ள அறிவும் அழிந்து தீயிற்பட்ட தளிர்போல் வதங்கிக் குழியில்படு கரியெனத் தரையிற் சாய்ந்தான். இதுகாறும் கேட்டுவந்த அவன் செவி "தமயந்தி தன்னை மணக்க இசைந்துளாள்" என்னும் சொல்லைக் கேட்கவில்லை. அதற்குள் ஆற்றாத அவன் உணர்வு போய்விட்டது.

இந்நிலைகண்ட அன்னம், தான்புரிந்த விளையாட்டு வினையாயிற்றே எனப் பயந்து தரையிற்கிடந்த நளனைத் தனியேவிட்டுத் துண்ணெனப் பறந்தோடிப்போயிருத்தல்வேண்டும். தன்னினைவு திரும்பிவந்த அரசன் அன்னத்தைக் கண்டிலன். தமயந்திக்கும் தன்மீது காதல் இருப்பது அறியாமலே தளர்ந்த உள்ளத்தனாய்த் தன் னகம்போய்ச் சேர்ந்தான்.

நைடதத்தில் இதற்கு மாறாக இருந்தாலும் புகழேந்தி வகுத்தபடி, வழியில் தேவர் தன்னைத் தூதுவேண்டியபோது, அவளன்பை அறியாமலே உடன்பட்டான் என்பது தெரியவருகின்றது. அதனைப் பின்னர் ஆராய்வோம்.

இவ்வுரை முடிவதன்முன் இன்னமொன்றும் இங்குக் காட்ட விழைகின்றோம். தமயந்தியின் குணநலங்களைக்கேட்டு இளகிய மனத்தனான நளன் முதலில் "இனி உன் வாயுடையது என்னுடைய வாழ்வு" என்று குறிப்பால் சொன்னதையும், நளனது பெருமையைக் கேட்ட தமயந்தி, "காவினிடைத் தேர்வேந்தற்கு என்நிலைமை சென்று உரைத்தி" என்று நேராக விதித்ததையும் ஒப்புநோக்கி, இருபாலார் மனப்பான்மை ஒரே நிலையில் வேறுபடுவதை உணரலாம்

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[271-வது பக்கத் தொடர்ச்சி]

2. செங்கீரைப் பருவம்

நந்தாமணிப்பணி வரைப்புயத்தினி லாட
நறுமலர்த் தொடைய லாட
நன் னுதற்சுட்டியும் பட்டமுமிசைந் தாட
நகுமணிக்குழைக ளாட
அந்தாமவரைவடங் கிண்கிணிகலென் றாட
அவிர்தரள மாலையாட
ஆர்வத்தொ டன்னைய ரணைத்தேந்தி முத்தாட
அடுபுலியினகமு மாட,
கொந்தார் குழற்கற்றை முகமதிக்கெதிருலவு
கொண்டலி னசைந்தாடவுன்
கோலவிளை யாட்டினைக் கணினுதன்
முதற்றேவர் கொண்டாட வண்டாடுபூந்
செந்தாமரைத் தெரிவைமார்பில் விளையாடநீ
செங்கீரை யாடியருளே
தெண்ணன்மணியொளிர் வீதி வெண்ணெய்
நகர்வளர்சோதி செங்கீரை யாடியருளே 1.

தாராடு முடிநிருப ரெதிராடி யதிராத
சமராட வுயிர்விடுகுறைத்
தலையாட நிலையாதகுருதிப் பெரும்புணரி
தனிநீந்தி யலகைக்குழாம்
நீராட விசயமகள் நடமாட நிணமுண்டு
நிமிர்கழுகு கொடிபருந்து
நிழலாடு பந்தரினெ துங்கிமுகம்
வெயர்வாட நின்றவரை யஞ்சல்போமின்
போராட லொழிமினென உரையாட
நகையாடு பொருதலர்த் தமருமுருவப்
புகையாடு மேனிருகூறாட இவ்வாறு
போர்மூட்டி விசயனிசையுந்
தேராடன் மாவினொடு சீராடிநின்றவா
செங்கீரை யாடியருளே
தெண்ணன் மணியொளிர் வீதிவெண்ணெய்
நகர்வளர்சோதி செங்கீரை யாடியருளே 2.

முத்திக்கு வெஞ்சிலையை நிகர்புருவம்
வளையவிள முறுவலின் நிலவுபொழிய
முளரிமல ரைச்சினவி யரிபரந் திருகுழையின்
மோதும் விழிகருணை பெருகத்
தத்திக்குறங்கிடை யிருக்கெனச் செவிலியர்
தடுக்கவு மசோதை மடிமேற்
றுவுமிரு கானிலம் பதியவைத் திணையடித்
தனிவிரல்குனித் தூன்றிமேல்
மத்திக்கு முழுமதி மறுத்துடைத்தனைய
முகமண்டலஞ் சிறிதெடுத்து
மலர்மாதும் நிலமாது முண்டுண்டுவட்டாது
வாயூறி நிற்பவமுதிற்
றித்திக்கு மிதழூற லிடையிடை
துளிக்கநீ செங்கீரை யாடியருளே
தெண்ணன் மணியொளிர் வீதி வெண்ணெய்
நகர்வளர்சோதி செங்கீரை யாடியருளே 3.

கந்தம்வளர்சந்தப் பொருப்பிற் பிறந்துலகு
காதல்பெறு சங்கமேவிக்
கருதுமைந்திணையகப் பொருளையுந்
துறைமுகங் காணவிட் டொழுகுதொடர்
சந்தமு மலங்கார முஞ்சிறந்த முதினுந்
தண்மையாய் மதுரமாகித்
தாழாது சீர்பெற்றடிக்கடி பெருக்கந்
தலைக்கொடு மிகத்தெளிந்தே
அந்தமிகு பூமிமுதல் மங்கலப்
பொருள்படைத்தந்தரங்கத்தொடெவரும்
ஆடுதற்குரிமையா யோசையுடனுழமு
மணைந்து பெரியோர்கள் புகழச்
செந்தமிழெனப் பெருகு பெண்ணைச்
செழுந்துறைவ செங்கீரை யாடியருளே
தெண்ணன் மணியொளிர்வீதி வெண்ணெய்
நகர்வளர் சோதிசெங்கீரை யாடியருளே 4.

[இந்தப்பாடல் செந்தமிழ்க்கும் பெண்ணை நதிக்கும் சிலேடையாக வந்தது]

வெண்டிரைக் கடலகழி லங்கையா
ணிருதர்கோன் வேதனுற் பெற்றவரமும்
வெள்ளியங்கிரி பெயர்த்திட்டதிண்
டோள்வலியும் வெஞ்சின இயக்கர்கோமன்
கொண்டமலர் மானமும் மானமுங்
கைக்கொண்ட கொடுமையுங் கடுநிறத்துக்
கூற்றையுஞ் சமரிடைக் கூத்தாடல் கண்டுவிடு
குறைவிலாண்மையு மமரர்கோன்
மண்டிய வமர்த்தலைப் பிணிபடச்
சிறையிலிடு மகவலியு மூவுலகமும்
வந்தடி பணிந்துதன் ஏவல்முறை கேட்பவுயர்
வண்மையுஞ் செல்வமுமெலாந்
திண்டிறலொ ரம்பின்வலி யால்வாங்கு
கொண்டலே செங்கீரை யாடியருளே
தெண்ணன்மணி யொளிர்வீதி வெண்ணெய்நகர்
வளர்சோதி செங்கீரை யாடியருளே. 5.

வேறு

குருமணி மேகலை வைத்தசுருங்கிடை
கொம்பாகுந் தேமல்
குடிகொளும் வார்முலை முத்துவடம்புனை
குன்றேயும் பூவின்
வருமதுவூறல் பெருக்கு மரும்பவ
ளம்பா லென்றானுன்
வரிவிழியா ருயிரைக்கொளும் நஞ்சிது
வம்பாமன் றேசொல்
ஒருமதியோடு முதித்த விளங்கொடி
யுன்கோலம் போதும்
ஒளிர்மணி மார்பினி ருத்திமகிழ்ந்
தெனிலுய்ந்தே னென்றாடு
திருமகள் வாணகை பெற்றுமகிழ்ந்தவ
செங்கோ செங்கீரை
செழுநவநீத புரத்திலமர்ந்தவ
செங்கோ செங்கீரை. 6

கரைபொரு காதலளித்த மடந்தையர்
கண்போலுங் காவி
கருகிய நீல நிறத்தறல் கொந்தள
கம்போலுந் தோய
நிரைதொறு மூடு சுழித்திட லுந்தி
நிறம்போலுங் காணில்
நிறைகவர் மாதரை யொக்குமி தென்று
நினைந்தே திண்டோளின்

வரையுடை காமுகர் புக்குளே யுந்தொறும்
வண்டார் பண்பாடி
மலர்முக மார்வ மிகுப்ப மலர்ந்து
மகிழ்ந்தாகந் தோயுந்
திரைகொள் பிணுகி நதித்துறை கண்டவ
செங்கோ செங்கீரை
செழுநவ நீத புரத்தி லமர்ந்தவ
செங்கோ செங்கீரை. 7.

மரகத மேனி நினைக்குநர் நெஞ்சலர்
வண்டே சங்காழி
வரிசிலை வாள்கதை வைத்த தடம்புய
மஞ்சே யஞ்சாத
குரகத வாய்த கரக்கை நிமிர்ந்திடு
குன்றே யன்பான
குவிமுலை யாயர் கொடிக்கள் பெறுங்கொழு
கொம்பே யெம்போல்வார்
பரகதி சேர அடிக்கம லந்தரு
பண்பா மண்பாவை
பாமற * வாள வுணக்க ளேசிந்து
பணிந்தா ரெங்கோவே
திரகம லாசன னைத்தரு புங்கவ
செங்கோ செங்கீரை
செழுநவ நீத புரத்தி லமர்ந்தவ
செங்கோ செங்கீரை. 8.

வேறு

தேனிமிர் கற்பக நாண்மல ரைப்பொழி
தேவர்கணின் ரூர்பார்
தீமை திருத்திய நான்மறை நற்றவர்
தேடினர்வந் தார்காண்
பானல் விழிச்சசி கேள்வன் விடுத்தெழு
பாரநெடுஞ் சோனை
பாழ்பட வெற்பொரு தாழ்விரல் வைத்தது
பாடினர் கண்டாமே
கூனல் மருப்பிள மேதி செநெற்கதிர்
கோதி நறுங்காவி
கோகன கத்திரள் வாவி யுழக்கியொர்
கோலஇளந் தாழை †
யானிழ லிற்றுயில் வேணு வனத்தவ
ஆடுக செங்கீரை
ஆரண வுட்பொரு ளான தனிச்சுடர்
ஆடுக செங்கீரை. 9.

நாறு மகிற்புகை வானவர் தங்கணி
நாவிநிறங் காண
நாக மணித்தல மேவு மதிக்குடல்
ஞாயிறி தென்றுக
ஏறு மதிற்கொடி பாக னினைப்பற
ஏழ்துர கஞ்சாட
ஏடவிழ் கைக்குழல் மாத ரடிப்பதி
லேறிய பந்தோடி
வீறு மிமைப்பிலர் மார்பி னுதைத்தெதிர்
மீளுதல் தன்கேள்வன்
மேனி திளைத்தொளிர் வாண்முலை யொப்புறு
மேடையில் விண்டோயும்
ஆறு புனற்சொரி வேணு வனத்தவ
ஆடுக செங்கீரை
ஆரண வுட்பொரு ளான தனிச்சுடர்
ஆடுக செங்கீரை. 10.

* பாரம் அற என்பது இடைக்குறையாய்ப் பரமற என வந்தது.

[† தழையால் - தழை மிகுந்த ஆலமரத்தின் கீழ் என்று கொள்ளின், தழை யென்பது தாழையென நீண்டு வந்த தென்க]

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்

[256-வது பக்கத் தொடர்ச்சி]

சூதுபோர்ச் சருக்கம்

துரியோதனன் செய்த சூழ்ச்சி குலத்திற் கிழுக்கை விளைக்குமெனக் கூறிய பின்னர், தருமர், சூதாடுதலால் உண்டாகும் குற்றங்களனைத்தையும் பலரும் அறியும்வண்ணம் மூன்றுகவிகளில் எடுத்துரைக்கிறார். கைவிளக்கேந்தும் ஒருவன் பிறருக்கு ஒளியைக் காட்டினும், தன் கைக்குமட்டும் அவ்வொளியைக் காட்டாது, அது அவ்விளக்கின் நிழலில் இருளடைந்திருப்பதுபோல், தருமர் கூற்றுக்களும் இவ்வமயம் பிறர்மனதைத்தெருட்டி அவர்மனதைமட்டும்தெருட்டாதனவாய் நிற்கின்றன. புகைவண்டி புறப்படுமிடங்களிலுள்ள கூலியாட்கள், தங்கள் மொழியாலும் செயலாலும் பிறரைத்தெருட்டி, நல்லதொரு க்ஷேத்திரத்திற்குப் பிரயாணிகளை யனுப்பித் தாங்கள் மட்டும் இருந்தவிடத்தில் முன்னைய நிலையில் நிற்பது போல், தருமரும் பிறருக்கு நல்லுபதேசம் செய்துதன் னிலையோ மாறுதிருக்கின்றவ ராவர். இவர் பின்னால் செய்யப்போவ தின்னதென அறிந்திருக்கும் நமக்கு இவரது நன்மொழிகள் நகைப்பை விளைக்கும். இதனை ஆங்கிலேயர் நாடகவியலுள் ஒருவகைப் பரிகசம் என்பர். நமது நாட்டிலும் இதை 'எல்லாம் சொல்லுமாம் பல்லி, கழுநீர்ப்பானையில் விழுமாம் துள்ளி' என்னும் பழமொழியால் விளக்கிக்காட்டுவர்.

அடியு மாண்மையும் வலிமையுஞ்
சேனையு மழகும்வென் றியுந்தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும்
பெருமையுங் குலமுமின் பமுந்தேசும்
படியு மாமறை யொழுக்கமும்
புகழுமுன் பயின்றகல் வியுஞ்சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர்
சூதின்மேல் வைப்பரோ மனம்வையார்.

[அடி - சந்ததி; தேசு - ஒளி, கீர்த்தி; படி-பூமி, நற்குணம்; சேரமடியும் - ஒருங்கே அழியும்]

ஒருவனுக்கு நிலவுலகில் புகழையும் களிப்பையும் உண்டாக்கத்தக்கவைகள் யெவை யெவை யுண்டோ

அவைகளனைத்தையும் ஒருசேர அழிக்கு மிந்தச்சூது. செல்வம்போம், பெருமைபோம், மானம்போம். அதனால் ஆண்மை குன்றும். பின்னர் இவன் காரணமாய்க் குலத்திற்கும் தீங்குநேரும் தருமரிடத்தில் நிகழ்ந்ததுபோல் அறிவுமயங்கித் தாங் கற்றகல்வியின் பயனனைத்தும் வீணேபோம். சூது 'நிலக்கிழமை' யாகிய அரசாட்சியை வீழ்த்தி மாளுறுத்திடும். இச்செய்யுளில், மொழிகளைத் தொடர்ச்சியாயமைத்து அடைமொழியின்றி யாப்புச் சிதைவுபடாமல் எழுதிய திறமை வியக்கத்தக்கது. 'தத்தம், முன் பயின்ற' என்னுமிரண்டடைமொழிகள் நீங்கலாக மற்றைப், பெயர்ச் சொற்களும், தொழிற்பெயர்களுமா யுள்ள மொழிகளைச் சீர் தளை குன்றாமல் செய்யுளி லமைத்தெழுதியது ஒருவித கைவன்மை.

குழக ராயிள மடைந்தையர்க்
குருகுவோர் குறிப்பிலா மையினுலும்
பழகு வார்மிகச் சிந்தைநோய்
தாங்களே படுக்குமா றுணராம
லழகு பேரறி வாகவே
கொண்டவ ரறத்தொழில் புரியாமற்
கழக மாடவும் பெறுவரோ
விதனினுங் கள்ளுண லினிதன்றே.

[இளவயதுடையவராயிருக்கும்வாலிபர்களாய்இளம்பருவ மங்கையருக்கு மனமுருகுகிறவர், ஆராய்ச்சி இல்லாமையாலே, தாங்களே துன்பத்தில் படுதலைத் தெரிந்துகொள்ளாமல் சூதாட்டத்தில் எந்நாளும் அதிகமாய்ப் பழகுவார்கள். சிறந்த அறிவே தங்களுக்கு அணிகலமாகக் (அழகாக) கொண்டவர், தருமத்தைச்செய்யாமல்சூதும்ஆடுவார்களோ இதைவிடக் கட்குடித்தலே மேலான தன்றோ]

வளநிதிபடைத்த மாபெருஞ் செல்வவானொருவன், தானீட்டிய ஆக்க மனைத்தையும் முதிர்பருவ மடையாத தன் மைந்தனுக்குத் தந்து கழிந்தால், அவ்விளங்காளை இரண்டோ ராண்டில் அப்பேற்றினை அறவே அழித்துவிடுவதை நாம் கண்டுள்ளோம். இங்ஙனம் அழிப்பதற்குக் காரணமாயுள்ளவை கள்ளும் சூதும் காமமும். இவை ஒவ்வொன்றும் தனித்தனிஇருநிதிக் குப்பையை எளிதிற் சுட்டழிக்கும் வல்லமை வாய்ந்தவை. ஆயினும் அவை ஒருபோதும் தனித்துறைவதில்லை. பாழடைந்த இருட்டறையில் எவ்வாறு கறையானும் கருப்பானும் பாச்சையும் சேருகின்றனவோ, அதேபோல் இவைமூன்றும் ஒளிபெறாத இளைஞர் மனத்திற் குடிகொள்கின்றன. இளம் பருவந்தனில் இளமங்கையர்க் குருகுதல் இயல்பு. ஆங்கிலப் பேரறிஞரான ஷேக்ஸ்பியர் கவி எழுதிய நாடகமொன்றில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து உன் வயதென்ன வென்று வினவியபோது "நான், ஒருத்தி இனிமையாய்ப் பாடுகிறாளென்று அவள்மீது காதல் கொள்ளும் சிறுவனுமில்லை; பெண்ணென்னும் உருவத்தைக் கண்டவுடன் காரணமில்லாமலே அவளிடம் அன்புகொள்ளும்அவ்வளவு வயதானவனுமில்லை" என்று மறுமொழிகூறியுள்ளான். எனவே மிகச்சிறு காரணங்கொண்டும் இளமடைந்தையர்க் குருகும் குழகர், ஆய்ந்தறியும் தன்மை யில்லாததால், சிற்றின்பம் ஒரு சிறிதேகளிப்பூட்டுமென்பதையும், அதனால் எஞ்ஞான்றும் தீதுளதென்றும் அறியாமல், விளக்கிற் றீப்பட்டெரியும் விட்டில்போல் அவ்வின்பங்களையே காமுறுவர். அவ்வாறே கவறாடலும் ஒருசிறிது களிப்பையூட்டி, பேய்த்தேரைப்போல் "இதோகாண் செல்வம், இதோகாண் செல்வம்" என்றுகாட்டிக்காட்டி இறுதியில் அலமரச்செய்யுமென்று அறியாதார் இதனைக் கைக்கொள்ளட்டும். அறிந்தவர் இதிற் றங்கருத்தைச் செலுத்தார். மதுபானம் என்று மங்கலமாய்ச் சொல்லும் கட்குடித்தலே இதைவிடச் சிறந்ததாகும். அது உண்பவனொருவனுக்குமட்டும் தீமை விளைவிக்கும்; இது அவனைச் சேர்ந்தார்க்கும் துன்பமூட்டும். சினத்திற்குக் காரணமிது; அது சிறுமைக்குக் காரணமாம். கள்ளொருகால் நோயைத் தணிக்கும். சூது என்றும் மனநோயைப் புகுத்தும்.

மனைவி மக்கள் உடன்பிறந்தா ரனைவரையும் வறிஞராக்கித் தெருவில் நிறுத்துமிச் சூது. அதனாலன்றோ அறிஞர் அதனை வெறுத்து அறத்தொழில் கைக்கொள்வார். கள்ளும் சூதும் கலந்து நிற்றலையும், இவை எஞ்ஞான்றும் பெண்வழிச் சேர்ந்தார்மாட்டு உறழ்ந்திருத்தலையும் யாவரும் அறிவாரென்றுஉரைத்தோம். இங்கு, காதல் கவறாடல் கள்ளுண்டல்...... செம்மை நினையாமை பூண்டார் நெறி' என்று புகழேந்தி புகன்றதுவும்,'கள்ளுண விரும்புதல் கழகஞ் சேர்தல் மானுள்ளுறப் பிறர்மனை நயத்தல்,......அறநெறி வழுக்குமென்று அதிவீரராம பாண்டியன் அறைந்ததுவும் ஞாபகங்கொள்ளத்தக்கவை.

மேத கத்தெரி ஞானநூற் புலவரும்
வேத்துநூ லறிந்தோரும்
பாத கத்திலொன் றென்னவே முன்னமே
பலபடப் பழித்திட்டார்
தீத கப்படு புன்றொழி லிளைஞரிற்
சிந்தனை சிறிதின்றித்
தோத கத்துட னென்னையோ சகுனிதன்
சூதினுக் கெதிரென்றான்.

[மிகவும் தெரிந்த தத்துவநூலறிந்த புலவர்களும்,வேந்தருக்குரிய நீதிநூல்களை யறிந்தவரும், பெரும்பாதகத்திலொன்றென்று இச்சூதை முன்னமே மிகவும்பழித்துக் கூறியுள்ளார்கள்; தீதிற்குள்ளாகும் அற்பத்தொழிலுடைய இளைஞரைப்போல், ஒருசிறிதும் எண்ணமின்றி வஞ்சனையோடு என்னையோ சகுனி தன் சூதிற் கேற்றவன் என்று நினைத்தான்.]

சாமானிய மனிதர் இயற்கையையறிந்த தத்துவ ஞானிகளும், வேந்தரியற்கையறிந்த மற்றவரும் சூதாடல் பெரும்பாவமென்று முன்னமே அதைப் பழித்திருக்கின்றார்கள். ஆகையால் அதுநினைப்பதற்கும்ஏற்றதன்று. அங்ஙன மிருக்க நூலறிவு இல்லாத ஒருவனைப்போல் என்னையும் எண்ணி, தன் மனத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சியின்றி, 'புன்றொழிலாளன், எதற்குமிணங்குவான்' என்று என்னை மதித்து வஞ்சனையோடு சகுனி கவறாட அழைத்தது அடாது. அல்லது மூன்றாமடிக்குத் தீமையேமனதிற்குடிகொண்ட புன்தொழிலாளரான இளைஞரைப்போல், சிறிதும் ஆராயாமல் சகுனி என்னைச் சூதாட்டத்திற்கு ஏற்றவனாய் எண்ணியது அடாதுஎன்றுங் கூறலாம். சிந்தனை சிறிதின்றி என்பது," யான் நீதி நூல் அறிந்தவனோ அறியாதவனோ என்று உய்த்துணராமல் என்றும், இப்படிச் சூதாட அழைத்தலால் யானவனை எத்தன்மைத்தவனென்று எண்ணுவேனோ என்று ஆராயாமல் என்றும், என்னை இத்தீதிற்குள்ளாக்குவதால் இனி விளையும் தீமைகள் என்னவென்று ஆராயாமல் என்றும்

பொருள்தந்து நிற்கும். என்னையோஎன்பதில் ஓகாரம் ஒழிபிசை.

தன்க ருத்தினி னிகழ்ந்தவா றிம்முறை
தருமன்மைந் தனுங்கூறி
யென்க ருத்தினுற் பெறுவதென் விதியினை
யாவரே யெதிர்வெல்வார்
மன்க ருத்தையு மவன்றிரு வுளநிகர்
மகன்கருத் தையுநோக்கி
நின்க ருத்தைநீ யுரையென விதுரனு
நிகழ்ந்தன வுரைக்கின்றான்.

தருமர்தன் பின்னொழுக்கத்திற்கு இரண்டாமடி வித்திட்டவாறும். "இவ்வமயம் அவர்கள் சூதையுணர்ந்தபோது என்மனத்திலெழுந்தவற்றை யுரைத்தேன். இவையனைத்தும் ஏட்டுச்சுரையெனவே பயன்படப் போவதில்லை. இன்னபடி யென்று முன்னமே விதித்திருக்கும் இறைவன் ஆணையை யார் காக்கவல்லார்? ஐய! யான் தோன்றினவற்றை யுரைத்தேன். நீர் அரண்மனையிலுறைந்து தந்தையுடனும் அவன் மனதிற்கு ஏற்ற நல்லுணர்வில்லாத அவன் மகனுடனும் பழகியிருப்பதால் இனிஉமக்கு என்னதோன்றுகிறதென்று உரையும்'' என்றான். முற்றுமுணர்ந்த முதியோனைப் போற்பேசியபின்பு, செய்யவேண்டியதுஇன்னதென்று தானே அறிந்திருப்பவனும் ஆகியஇவன்மீண்டும்விதுரனை என்னசெய்வதென்று வினவுவானேன் எனில், இவ்வாறு வினவுவது உலகத்தாரியல். தன் எண்ணம் போல் பிறரெண்ணமும் உள்ளதோ என அறிவதும், தன் எண்ணத்திற்கு ஒரு ஆதரவுதேடி அதை உறுதிப்படுத்துவதும் மாந்தரியற்கை. எமக்குத் தெரிந்த நண்பரொருவர் தன் எண்ணத்தை வெளியிடும் பொழுதெல்லாம், இரண்டொரு வாக்கியங்கள் முடியு முன்னர், (What do you say?) நீ என்ன சொல்லுகிறாய், என்றுஆங்கிலத்தில் கேட்டுக் கேட்டு அவர் சொல்வதை ஆமோதித்து ஆம் என்றோ, உடன்பாட்டிற் கறிகுறியாய் தலைவணங்கியோ மாறுத்தரம்பெற்ற பின்புதான் அவர் மேலெடுத்துப் பேசுவார். இங்கு விதுரனைக் கேட்பதற்கு ஓர் பொருத்தமுண்டு. அவன் சிறியதாதையாயும், மூத்தோனாயும் இருப்பதோடு அரண்மனையிலேயே இருந்து அரசியற்கையை அறிந்திருந்தவன். ஆதலால் இச்சமயம் நன்மதி புகட்ட ஏற்றவன். ஆயினும் அவன் தூதன்; துரியோதனனுக்கு உள்ளடங்கினவன்; அவ னாணைகொண்டு இவர்களை அழைத்துப்போக வந்தவன். தான் சொல்லக்கூடியவைகளைத் தனது நிலைமைக்கு இழிவுவராமல் கூடுமளவும் சொல்லிவிட்டவன். அவனை மறுபடியும் உன் கருத்தினை உரை யென்பது அழகன்று. குறிப்பினால் அவன்ஏற்கனவேயாவற்றையும் மொழிந்துவிட்டானாதலால் விதுரன் தன்மாறுத்தரத்திலும்தன் கருத்தைத் தெரிவிக்காமல் அத்தினபுரியில் நிகழ்ந்தனவற்றையே சொல்லலுற்றான்.

இங்கு நீயெனக் கியம்பிய யாவையும்
யானுமன் னவர்கேட்ப
வந்து நீர்மையின் மொழிந்தன னென்மொழி
யார்கொலோ மதிக்கிற்பார்
பொங்கு நீருடைப் பூதலத் தலைவகேள்
புனைந்தநின் னிதயத்துத்
தங்கு நீர்மையிற் புரிகெனப் புதல்வனைத்
தந்தையுந் தகச்சொன்னான்.

"நீ இங்குச் சொன்னவற்றையெல்லாம் நானும் அத்தினபுரியிலே துரியோதனன் முதலானோர்க்கு இயம்பியுள்ளேன். எனவே நீ சொல்வதே முறை; அதன்படி நீ நடப்பாயாக. நான் என் தூதின் தன்மைக்கு இழுக்கு வாராவண்ணம் பேசவேண்டியவனுனபடியால், இதற்குமேல் நானுனக்குச் சொல்ல வியலாது. யான் மொழிந்தவை நீர்மையானவை; அவை தகுந்த நீதி புகட்டியதால் அவற்றைத் துரியோதனன் மறுத்தான். அண்டிப் பிழைக்கும் என்சொற்களை அவன் மதிப்பானோ? யார்தான் மதிப்பர்? நான் வெளிப்படையாகச் சொல்லினும் பயனுளதோ? நீதான் மதிக்கப்போகின்றாயோ? யான் அன்னவர்க்கு அங்கு இயம்பினேன்; என்மொழி பயனற்றுப் போயது. பூதலத்தலைவனை மன்ன கேள்! இங்கு உள்ள மன்னவா (நீயும்) கேள். அங்கே சொன்னதைத் தான் இங்குச் சொல்லப் போகின்றேன். முன்னம் நான், 'சூதினால் வென்றுகொள்கை தோற்றமும் புகழுமன்று; நான்மறையுள்ளளவும் அவ்வசை யறாது; உனக்கு ஊர்தான் வேண்டின் நின் தாதை யோர் ஓலைபோக்கினான் தருமன் யாவற்றையும் தந்திடுவன்; நீவி ரிருவீரும் ஒத்துவாழின் அரசெல்லாம் பணிந்து நும் வாயிலில் நிற்பர்; இல்லையேல்வேற்றரசரெல்லாம் (நீர்மடிய) சூரியனில்லாதபோ தொளிரும் நிலவுபோல் திகழ்வர், என்று கூறியுள்ளேன். நீ பூதலத்தலைவனும் தருமனும் ஆதலால் மனுநெறி யாதென அறிவாய். ஆதலால் உன்மனதிலெது உத்கிருஷ்டமெனத் தோற்றுமோ அதையே செய். மனதிற்படுவது பொய்யாது; நின் மனச்சாக்ஷிக்கு மாறின்றிச் செய்க'' என்று அவனும் தன் தூதுக்கேற்ப (தக)வெளிப்படையாய் மாறுத்தரம் புகலாமல் பொதுவாய்ச் சிலவார்த்தைகளைக் கூறினான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[274-வது பக்கத் தொடர்ச்சி]

4. சப்தப் பிரமாணம்

(i) சப்தத்தின் இலக்கணம்

சப்தமென்பது ஆப்தவாக்கியம். *. உள்ளவொரு பொருளைஉபதேசிக்கும்புருடன் ஆப்தனெனப் படுவன். வாக்கியமாவது, அவாய்நிலை யோக்கியதை அண்மைகளையுடைய பதங்களினது கூட்டமாகும். இதுஉடன்பாடாயும் எதிர்மறையாயு முள்ள உருவங்களும் பெ

* வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதி னாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே
ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 1.

றும். "அவனன்றி யோரணுவும் அசையாது" என்பது பெரிய ஆப்தவாக்கிய மென்பர் தாயுமானுர். ஒரு பதமானது தன்னளவில் வாக்கியமாகாது. புரவியென்பது ஒரு அர்த்தம் விளக்கவேண்டுமாஞல், இதோ காணப்படும் பொருள் புரவி என்று எழுவாயாகவோ அல்லது பயனிலையாகவோ, மற்றும்சில தொக்கிநிற்கும் பதங்கள் விரிந்தாலன்றிப் பொருள் வெளிப்படாது. இதன்றியும், சொற்கள் இலக்கண நூல்களில் தனித்துக்கூறப்படுவது இலக்கணகாரர் செய்கையன்றிஉலக வழக்கில் தனித்து ஒரு பதம் யாதும் பயன்படாது. இதையே, தர்க்கத்தில் அவாய்நிலை (Syntax) வேண்டுமென்பர். இதன்றியும் வாக்கியத்தின் எழுவாய்க்கு யோக்கியதையுள்ள பயனிலையும், பயனிலைக்குத் தக்க எழுவாயும் அமைந்தாலன்றித் தர்க்க ஒழுங்கில் வாக்கியமாகாது. "தீயால் நனைக்க" என்பது இலக்கண முறையில் வாக்கியமாயினும், தர்க்கமுறையில் வாக்கியமாகாது. ஏனெனில் இலக்கணத்தில்பெயர்ச்சொல் எழுவாயாகவும் வினைச்சொல் பயனிலையாயும் ஏனை சொற்களின் சையோகத்துடன் இவ்விரண்டும் ஒரு வாக்கியமாயும் நிற்கும். தர்க்கமுறைப்படி சொற்களின் பொருள்கள் பொருத்தமாயிருந்தாலன்றி வாக்கியம் ஏற்பட வியலாது. "தீயால், நனைக்க" என்பது நீ தீயால்இப்பொருள்களைநனைக்கக்கடவாய்"என்றுவியங்கோளில் முடிவுசெய்வது இயற்கையில் கூடாமையான காரியமாதலால், தர்க்கத்தில் இது வாக்கியமாகாது. இவ்வகையில், பொருளின் பொருத்தத்தில் தோஷம் யாதும் நேராமல் திருநாவுக்கரசு பாடுவது காண்க:

நோக்காதே யெவ்வளவு நோக்கி ஞனை
நுணுகாதே யாதொன்று நுணுகி ஞனை
யாக்காதே யாதொன்று மாக்கி ஞனை
யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத்
தேக்காதே தெண்கடனஞ் சுண்டான் றன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நீக்காத பேரொளிசேர் நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே.

—திருப்புன்கூர் - திருநீடூர் - திருத்தாண்டகம் 5.

மற்றும் தர்க்கவொழுங்கின் வரும் வாக்கியம் தொகைநிலைத் தொடராயிராமல், தொகாநிலைத் தொடராயிருத்தல் வேண்டும். பதங்களின் மறைப்பு இருத்தல் தர்க்க வாக்கியத்திற்கு ஒரு இடையூருகும். எனவே, தர்க்கத்தில் வாக்கியமெனக் கொள்ளப்படுவது, அவாய்நிலை, யோக்கியதை, அண்மை யென்னும் மூவகையிலக்கணங்களும் பொருந்தியது. இது உள்ள பொருளை உபதேசிக்கும் புருடனுகிய ஆப்தனுல் சொல்லப்படுமாயின் சப்தமெனப்படும்.

(ii) மூவகை உபதேச புருடர்

திரிபுணர்ச்சி யுடையவர்களின் வாக்கியமும், வஞ்சகர்களின் வாக்கியமும் பிரமாணமாகாது. இன்னோரைப்பிரித்துக் காட்டுவதற்கே ஆப்தனது வாக்கியமே சப்தப் பிரமாணமென்று தர்க்கநூல் கூறும். இவற்றுள் வஞ்சகர் எவ்வாறு சிவபெருமானுல் கடியப்பட்டவரென்பது தேவாரவாயிலாய்க் காண்க.

வஞ்சகர்:—

வஞ்சனை யாரார் பாடுஞ் சாராத மைந்தனைத்
துஞ்சிரு ளாடலுகந் தானைத்தன் றொண்டர்
நெஞ்சிருள் கூரும் பொழுது நிலாப்பாரித்
தஞ்சுட ராய்நின்றானை நான்கண்ட தாரூரே.

திருவாரூர்—பண் - சீகாமரம்.

வஞ்சகர், பொருள் ஒன்றெனவறிந்து மற்றொன்றை அதுதானென்று உணர்த்தும் பொய்யர்.

மயக்கத்தாற் பொருள்களை விபரீதமாக உணர்ந்து உரைப்பவன் திரிபுணர்ச்சி யுடையோன், அல்லது பிராந்தன் எனப்படுவன். இதை அப்பர்,

ஓர்த்துள்ளவாறு நோக்கி யுண்மையை
யுணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென்றெண்ணி மயக்கில்வீழ்ந்
தழுந்து வேனைப்
பேர்ந்தெனை யாளாக் கொண்டு பிறவிவான்
பிணிக ளெல்லாந்
தீர்த்தருள் செய்தார்சேறைச் செந்நெறிச்
செல்வ னாரே.

திருச்சேறை—திருநேரிசை - 2.

என்னும் பாசுரத்தால் விளக்குவதைக் காண்க. எனவே வஞ்சகன், பிராந்தன், நீங்கப் பொருளுணர்ந்து உணர்த்துவோன் ஆப்தன். ஆயினும் அவன் வாக்கியம் மேற்கண்ட மூவகை இலக்கணங்களும் பொருந்தியிருத்தலானே, அது சப்தப்பிரமாண மெனப்படும்.

பெற்றோரும் மக்களும்

பெற்றோர்பெறும் மக்களின்பம் மறைவாய் நிற்கும்; அவர்தம் துயரமும் கவலையும் அவ்வழியே; இன்பத்தைக் கூறுதல் இயலாது; மற்றதைக்கூற மாட்டார். மக்கள் செயல்களுக்கு இனிமையூட்டுவர்; எனினும், அல்லல்களை ஆழமாக்குவர். வாழ்க்கையின் கவலையைப் பெரிதாக்குவர்; ஆயினும், சாக்காட்டின்வேதனையைக் குறைப்பர். குலவளர்ச்சி என்ற உணர்வு விலங்குகட்கும் உண்டெனினும், நினைவும் சிறப்பும்புகழ்ச் செயல்களும் மாந்தருக்கே உரியன. ஊன்றி நோக்கி உண்மையை ஆராயின், கல்விச்சாலை அறச்சாலை முதலிய பொதுச்சாலைகள், மக்கட்பேறு வாய்க்கப்படாதாரிட மிருந்தே பிறந்திருப்பதை எங்குங் காணலாம். அன்னர் அத்துறை நின்றது, அவர் மனத்தின் மாட்சியை, உடலால் உருப்படுத்த முடியாவிடத்து, மற்றொருவழியில் உருப்படுத்தும் பொருட்டே. ஆனது பற்றி, குலப்பெருக்கின் உணர்ச்சி மக்கட்பேறில்லார் மாட்டு, பெரிதேயெனல் இயையும். முதல்முதலில் இல்லமமைத்தோர், தம் மக்கள்பால் அளவு மீறிய ஆசையைக்கொண்டுளர்; ஏனெனில் தம்மக்கள், தம் இனத்தைத் தொன்றுதொட்டு வளர்க்க வந்தவர்களென்றதோடு நில்லாது, தம் செய்கைகளையும், அவ்வாறே நிலைநாட்ட வந்தவரெனக் கருதினர்; ஆதலால் மக்களோடு செயல்களும் குலப்பெருக்கிற் குரியனவே.

மக்கட்பேற்றைப் பெரிதுடைய பெற்றோர், அம் மக்கள்யாவரிடத்திலும் ஒரே யளவு அன்புடையராய் இருத்தலில்லை. பற்பல சமயங்களில், அன்பின் நிறை வேறுபடுகிறது; சிற்சில வேளைகளில் அவர் காட்டும் அன்பு இகழ்ச்சிக்கே இடம்; இது பெரும்பாலும்

அன்னைபால் அமையும். ஸாலமன் என்ற பேரறிஞர் கூறியபடி, "அறிவுடை மகன் தந்தையைக் களிப்பிக்கின்றான். கொச்சைமகன் தன் தாயை இழிவடையச் செய்கின்றான்." மக்கட் பெருக்குடைய குடும்பத்தில் தலைமகார் ஒருவர் இருவரே மரியாதைக்குரியவராகின்றார்; கடைமகார் செல்லப்பொருளாய்த் திகழ்ந்து, தீது படுகின்றனர்; இடை மகாரோ, பல தடவைகளில், மறக்கப்படு பொருளாய் நிற்கின்றனர்; ஆயினும் அவரே மகார் யாவரினும் சிறப்புவாய்க்கப் பெறுகின்றார். மக்கள்பால கடுஞ் சிக்கனம் தீக்கொணர் பிழையே, அது மக்களைக் கீழ்மைப்படுத்துகின்றது; காலத்திற் கேற்ற கோலம் புனையச் செய்கிறது; கயவர் கேண்மையைப் பிணைக்கிறது; ஒன்றின், நிறைவையடையினும், போதுமென்று நினையாது, மேலும்மேலும் விழைவுறச் செய்கின்றது. சிக்கனவழிச் செல்லாது மக்களை யடக்கி யாளும் முறைமையோடு பெற்றோர் நின்றிடில், நற்பயன் பெரிதேயுண்டாம். மாந்தர்—பெற்றோராயினும், ஆசானாயினும், பணியாளனாயினும்—குழவிப் பருவத்தில், ஒருவயிற்று மக்கட்குள், போட்டி யுணர்ச்சியை எழுப்புதல் மூடச் செய்கையே; அது முதுமைப் பருவத்தில் வேற்றுமையுணர்ச்சியை வளர்த்து, குடும்பங்களைத் துயர்க்கடலில் ஆழ்த்திவிடுகின்றது:

இந்திய நாட்டினர், தம் மக்கள், உடன்பிறந்தார் மக்கள், நெருங்கிய உறவினர் இவர்களுக்குள், எவ்வித வேற்றுமையும் பாராட்டுவதில்லை. ஒரு குலையைச் சேர்ந்தவர்களென்று ஏற்படின் போதும், தம் உடல் வழிப் பிறத்தலை, பெரிதாக எண்ணுவதில்லை. ஆராய்ந்து பார்க்கின் அப் பான்மை, இயற்கை புலகில் காணும் ஓர் உண்மை. அவ்வாறு கூறுவதுஎன்னையெனின், தங்கை மகன் அல்லது தமக்கை மகன் ஒருவன், தன் பெற்றோரைக் காட்டினும், தன் மாமனையோ அல்லது நெருங்கிய உறவினனையோ ஒத்திருத்தல் கூடும். பெற்றோர்கள் இளமையிலேயே தம் மக்கட்கேற்ற தொழிலையோ வாழ்க்கையையோ நாடட்டும்; ஏனெனில் அப் பருவம், பெற்றோர், எண்ணிய வழிக்கு இணங்கும். ஆனல், பெற்றோர் மனதிற்கு உகந்த வழியே பிள்ளை மனத்திற்குச் சிறந்தவழியென எண்ணி, மக்களின் மனப்பான்மையை ஊன்றி உணரவேண்டா; ஏனெனின் மக்களின் விழைவு யாதாமொரு வழியில் ஆழ்ந்துநிற்குமாயின் அதைக் குலைக்காமல்விடுவது நன்று. ஆனல், பொதுவாக, "சிறந்ததை நாடு; பழக்கம் அதனை எளிதாக்கும், இனிதாக்கும்" என்ற மூதுரை நன்றெவற்றுள்ளும் நன்றே.

TOPICS OF THE DAY
Order Your Copy

Gandhiji in England

And The Proceedings of The Second R.T.C.

Re. 1-8-0

The book begins from the Truce and contains a complete and comprehensive account of the Mahatmaji's voyage to England as the accredited Ambassador of India; his wonderful reception at various places, the addresses presented to him and his replies thereto; together with an account of the Proceedings of the 2nd R. T. C., verbatim reports of the speeches of the Mahatmaji, the Prime Minister Mr. Macdonald, Lord Sankey and other important pronouncements made by the other members of the Conference including the final statement of the Premier both at the R. T. C. and the House of Commons and the magnificent support of Lord Irwin in the Lords' Debate; his visit to the King and various other activities in England and the Continent bringing the story up to his return and landing at Bombay. A book of surpassing interest and useful addition to the history of the World.

Life of Barrister Savarkar

BY
CHITRA GUPTA

The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Re. 1-8**

Those, who like to know something of V. D. Savarkar's views, will do well to read his own books, for example:—

		Rs.	A.
1.	Hindutva	1	4
2.	An Echo from the Andamans. ...	1	0
3.	Hindu-Pad-Padashahi: or a critical Review of the Hindu Empire of Maharashtra. By Vinayak Damodar Savarkar with an introduction by Dr. R. C. Majumdar, M.A., Ph.D., Dacca	3	0

B. G. PAUL & Co.,
Publishers
12, Francis Joseph Street, MADRAS.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

லிமிடெட் ஸோல் ஏஜண்ட்: கன்ஸான், மதுரை

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

நஞ்சன்கூடுபல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (சீல் செய்தது) டிடெடமேடிகேடட் டப்பி
கோரோஜனை மாத்திரை

பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

கலாநிலயச் சொல்லூடாட்டம். 1.

இடம்—வலம்

1. இந்திரன்
4. காட்டுப் பசு
7. கிளி
8. நிடதநாட்டுத் தலைநகர்
10. இராவணனுடைய சேனாதிபதி
12. இலக்குமி
13. ஒன்றியாயிருத்தல்
15. வேதம்
16. பட்டினம்
18. வலிமை
19. பூச்சிநூலாடை
20. நான்கு யுகங்களிலொன்று
22. சிவஞான சித்தியாரில் ஓர் அத்தியாயம்
23. சமுத்திரம்
24. மரத்திலிருந்து அறுத்தது
25. எருமை
26. உண்
27. மயக்கங்கொள்
28. உடலின் உள்ளுறுப்பு

1	2	3		■	4	5	■	6
7			■	8			9	
10			11		■	12		■
	■	■	13		14	■	15	
■	16	17		■	18			■
19			■	20		■	■	21
22					■	23		
24			■	25			■	
26		■	27		■	28		

மேல்—கீழ்

1. தேவாரம் பாடியவர்களில் ஒருவர்
2. அம்பு
3. வாசனை
4. உயிர்
5. குடித்து
6. அழகிய
8. துர்க்கை
9. பாண்டவர்களில் ஒருவன்
11. பெண்கள்
14. சீதை
16. சினேகமல்லாதவன்
17. கொன்றை
19. பரமசிவன்
20. ஆட்டுமயிரில் நெய்தது
21. கைப்போர் வல்லவர்
23. ஓர் புன்செய்ப் பயிர்

கடைசிநாள் :—1932 வருடம், மே மாதம், 16 தேதி

இதற்குப் பிழையற நேரான விடை யனுப்புவார்க்கு, கலாநிலயம், 1930-வது அல்லது 31-வது வருட ஆப்லெதர்—கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று வெகுமதி யளிக்கப்படும். அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் சந்தாத் தொகையின்றி நம் பத்திரிகையை ஒரு வருடம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இது அவர் இஷ்டத்தைப் பொருந்தியது.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதியனுப்பவும்.
2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். ஒருவரே, பல விடைகள் முயன்று, அனுப்பினும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றிற்கும் 4 அணா தபால் தலை யனுப்பவேண்டும்.
3. விடைகள், எம்முடைய காரியாலயத்திற்கு, அடுத்த மே மாதம் 16உக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.
4. வந்த விடைகளில் ஒன்றுமட்டுமே பிழையில்லாது நேரா யிருக்குமாயின் அதனை அனுப்பியவருக்கு முன்னுரைத்தபடி பரிசளிக்கப்படும். நேரிய விடைகள் ஒன்றிற்கு மேற்படுமாயின், அதனை அனுப்பியவர்களின் பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப்போட்டு, யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கே அளிக்கப்படும்.
5. விடையின் நேர்மையும் மற்ற விடயங்களையும்பற்றி மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது.
6. இந்தப் போட்டியில், நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.
7. விடைகள், பேர், மேல்விலாசம் முதலியன தெளிவாய் எழுதப்படல் வேண்டும்.

விடைகளை, மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, சென்னை.

என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

குறிப்பு:—1. சொல்லூடாட்டத்தை விடுவிக்க முயலும் வழி தெரியாதவர், ஆங்கிலப்பயிற்சி யுள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

2. கையில் நல்ல அகராதி ஒன்றும் நிகண்டும் ஒன்றும் இருக்குமாயின் அவை, மிக்க உதவியாகும். விச்வநாதப்பிள்ளை தமிழ்—தமிழ் - ஆங்கிலம் அகராதியும் (விலை ரூ. 6) ஸ்ரீமான் ஸ். வையாபுரிப்பிள்ளை இயற்றிய நாமதீப நிகண்டும் (விலை ரூ. 2) எம்மிடம் கிடைக்கும்.

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள்ள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணைக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

காசி இந்துக்கல்லூரியில் ஆசிரியராயிருந்த புரொபஸர் P. சேஷாத்ரி, அஜ்மீர் கவர்ன்மெண்டு கல்லூரியின் தலைவர் பதவியை ஏற்றுள்ளார் என்று டில்லிச் செய்தி கூறுகின்றது.

***

செட்டிநாட்டில் கனம் கிருஷ்ண நாயர்:—சென்ற வாரம் சென்னை அரசாங்க நிர்வாக சபையின் சட்ட அங்கத்தினரான கனம் ஸர். கிருஷ்ண நாயர் காரைக்குடி சென்றார். அங்கு அவ்வூர் நகரசபையினர் ஒருபசாரப்பத்திரம் அளித்தார்கள். மறுதினம் கானாடுகாத்தானில் அவருக்கு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரால் ஒரு விருந்து அளிக்கப்பட்டது.

***

புதுவயல் சரஸ்வதி சங்கம்:—புதுவயல் சரஸ்வதி சங்கத்தின் பத்தாவதாண்டு நிறைவு விழா நிகழும் ஆங்கிரசவாண்டு சித்திரைமீ 5உ (17-4-1932) ஞாயிற்றுக்கிழமை மாலை E. P. பெரியண்ணன் செட்டியார் கட்டிடத்தில் நடைபெறும். திருச்சிஜில்லா போர்டுதலைவர் ராவ் பகதூர். T. M. நாராயணஸ்வாமி பிள்ளையவர்கள் இக்கூட்டத்தில் தலைமை வகிப்பார். அவ்வமயம் பலவான்குடி வாசியான திரு. பொன்னம்பலசிவம் அவர்கள் தமிழின் மாட்சி என்பது பற்றியும், திரு V. R. M. செட்டியார் அவர்கள், செட்டிமார்நாடும் கல்வியும் என்பது பற்றியும், திருச்சி செயிண்டு ஜோஸப் கல்லூரித் தமிழாசிரியர் M. நடேச முதலியாரவர்கள் அப்பரின் அருள்மொழி என்பது பற்றியும் உபந்நியாசிப்பார்கள்.

இக்கூட்ட நிகழ்ச்சியின் இடையிடையே கோ.இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவைகள்நடைபெறும்.

***

பண்டித மாளவியாவின் முயற்சி:—அரசாங்கத்தார் காங்கிரஸைச் சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று செய்துவிட்டபடியால் 47-வது காங்கிரஸ் நடைபெற இயலவில்லை. எனினும் 1932-இல் 47-வது காங்கிரஸைக் கூட்டிவிட முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. பண்டிதர் மாளவியா அவர்கள் இவ்விஷயத்தில் ஈடுபட்டுள்ளார். காசியில் தம்மைக்கண்ட ஒரு பத்திரிகை நிருபரிடம் ஸ்ரீமாளவியா கூறியதாவது:—"இன்னும் காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திவருவதால் காங்கிரஸ் சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று இந்தியா கவர்ன்மெண்டார் கருதுகின்றார்கள் என்று தெரிய வருகின்றது. கவர்ன்மெண்டாரிடம் இது விஷயமாய் மனமாற்றம் ஏற்படுமோ என்னவோ தெரியவில்லை. எனினும் காங்கிரஸ் நடக்க வேண்டுவது அவசியம். காங்கிரஸ்காரர்கள் சம்மந்தப்பட்டமட்டில் நடத்திவிடவே தீர்மானம்செய்திருக்கின்றனர். அதற்கான வேலைகளும் நடந்துவருகின்றன. எனவே 47-வது காங்கிரஸ் டில்லியில் கூடுமென்றே நம்புகின்றேன்."

***

மாணவர்களுக் குபதேசம்:—சென்ற வாரம் திருநெல்வேலிசர்ச்மிஷன்கல்லூரியில்ஸ்டான்லி ஜோன்ஸ் என்னும்அமெரிக்கர், மாணவர்களின்நலத்திற்கென்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"இந்திய இளைஞர் கல்லூரியில் படிக்குங் காலத்திலேயே உலோகாயத வாழ்வின்பால் பற்றுக்கொண்டு விடுகின்றனர். பொருள் தேடலும், தேடிய பொருள்கொண்டு ஆடம்பர வாழ்க்கை நடத்துவதுமான நோக்கமே அவர் மனதின் முன்னணியில் நிற்கின்றது. இத்தகைய நோக்கம் நாட்டிற்கும் அதிலுறையும் மக்கட்கும்தீமையேபுரிந்துவைக்கும். பொருள் இகலோக வாழ்வினிற்கின்றியமையாதவொன்றாயினும், அப்பொருளே வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமா யமைதல் கூடாது. இலங்கை சென்றிருந்தகாலை நான் ஒருபுத்த சன்யாசியைக்கண்டேன். அவர் பணத்தைக் கையால் தொடுவதில்லை; தன்னுடையகைக்குட்டையில் பணத்தை வைத்துக்கொண்டு செலவுசெய்துவருகின்றார். கையால் தொடாததால் அவரைப் பணவாசையற்றவர் என்று சொல்லவியலுமோ. பற்றென்பது மனதைப்பற்றிய நிலை. பற்றிலா மனநிலை எய்தியவொருவன் பணத்தைத் தொட்டாலென்ன, தொடாது போனாலென்ன; இரண்டும் ஒன்றுதான். பணத்தை ஒரு கருவியெனக் கொண்டு அறவழியில் ஈட்டி நன்மைபயக்கும்வழியில் செலவுசெய்யவேண்டும். இவ்வழிபற்றிய ஒருவன் பணப்பற்றுதல் இல்லாதவன். இதை மாணவர் தம் மனதிற் கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக, மாணவ உலகத்தைப் பெண்ணிச்சை மிகவும் அலைக்கின்றது. கல்வி பயிலுங்கால் இளைஞன் மணம்செய்துகொள்ளல் கூடாது. உலகத்தில் மக்கள்உற்பத்தியின்பொருட்டுப் பெண்ணிச்சையைக் கடவுள் ஆடவனுக்கு அளித்துள்ளார். கடவுளது கருத்திற்குமாறுபடாத வழியில் பெண்களுடன்பயில வேண்டும். வரம்புமீறி விவகரிப்பவர் நோய் வயோதிகம் முதலியவைகளின் வாய்ப்பட்டு வருந்துவர். இதையும் மாணவர் மனங்கொள்ள வேண்டும்.

பள்ளியினின்று மாணவர் வெளிச்சென்ற பிறகு அவர்கள் கைக்கொள்ளவேண்டிய கடமை, பிறர் நலம் பேணலே. ஒரு நாட்டின் உயர்வு, இளைஞர்களிடம் இருக்கின்றது. நாடும் மக்களும் மேன்மை யெய்தும்படி முயல்வதேமாநுடவாழ்க்கையின்பயன். தன்னலம் பேணக் கடவுள் மனிதனைப் படைக்கவில்லை. இந்தியாவின் முன்னேற்றம் இந்திய மாணவர் கையிலுளது. முதன்முதல் மாணவர் ஆடம்பர வாழ்வை மறக்க வேண்டும். இதை மறந்தால் பொதுநலச் சேவையின் தூண்டுதல் எழுந்துவிடும். இதையும் மாணவர் மனங்கொண்டு, தாமும் தம்மொடு சமுகமும் நாடும் ஒருங்கே முன்னேறும்படி பொதுநல முயற்சிகளில் ஈடுபட்டு உழைப்பார்களாக.

***

அவிநாசி மஹா ரதோற்சவ விழா:—ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட அந்தணச் சிறுவனை மீண்டளித்த செயல் நிகழ்ந்த விடமாகிய தக்ஷிண காசி யென்று கொண்டாடப்பெறும் அவிநாசி என்னும் க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டுள்ள அவிநாசி நாதருக்கும் ஸ்ரீ பெருங்கருணையச் செல்விக்கும் திருக்கல்யாண விழாவும், ரதோற்சவமும் ஏப்பிரல் மாதம் 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடக்கின்றது என்று ஸ்ரீ. அ. சி. கருணாலய சுவாமிகள் தெரிவித்துப் பக்தியுடைய நன்மக்கள் அனைவரும் அத் திருவிழாவிற்கு வரும்படி அழைக்கின்றார்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

7-வது வருடம்! 7-வது வருடம்!!

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.
எஸ். ஜீ. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்
நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இது வரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
:: பாகவத விறு விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ண லீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விடயங்களின் மெய்க்கருத்தை விளக்கும் அநுபந்தங்களும் அடங்கியுளது. விலை ரு. 2

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச்செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4
ஆரோக்கிய கிரந்தம் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ.	18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)	10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது.	6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. F. Kumariah, B.A., B.L., (Editor)